Jan. 1914. உ Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.

Vol. II | 1089 மார்கழி. | No. 4.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மாதசரிதம்	97
2.	மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திர விளக்கம்	98
3.	கல்வி	103
4.	பூவரசு	108
5,	திருவனந்தைப் பிராமண சிரேஷ்டர்களுக்கு ஒரு விண்ணப்பம்	115
6.	தற்கால இந்துக்கள்	118
7.	புத்தக வரவு	122
8.	தமிழர் தொன்மை	126
9.	சமாசாரத்திரட்டு	127

Printed at the "BHASKARA" PRESS, and
Published by S. Muthuswamy Pillai, Trivandrum.

அனேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும்

பெற்ற டாக்டர் H. L. பட்லிவாலாவின்,

உலகப்பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலைசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்டமருந்து விலை ரூ க.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து விலை ரூ ௩.

Toinc Pills:—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டு பண்ணும், குளிகைகள். விலை ரூபா கஇ.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது. வாய்நாற்றம் பற்புழு பற்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும் விலை அணா ச.
பெரிய பொட்டணம் அணா அ.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தான மருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ச.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. H. L. Batliwalla's co,
Warli Labaratory, Dadar. Bombay.

சந்தாவிவரம்.

	ரூ	அ	பை.
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	0
பினங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு	3	0	0

குறிப்பு, (1) முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனமாகக்கொடுக்கப்படும்.

(2) அடுத்தஜனவரி மாதம் முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II } 1089 மார்கழி. { பகுதி IV

மாதசரிதம்.

செந்தமிழச் செல்வர்காள்!

வந்தனம். நான்காவது மாதமும் பிறந்தது. சென்றமூன்று பத்திரிகைகளையும் அச்சுப்பிழையின்றி, குறித்த சமயத்தில் வெளியிடுமாறு பலவழிமுயன்றும் பயனில்லாதாயினமைக்கு மிக வருத்தமும் வெட்கமுமடைகின்றேன். இனிமேல் ஒவ்வொரு தமிழ்மாத முடிவிலும் பத்திரிகையைச்சரியாய் வெளியிடுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற மூன்று மாதங்களாக, நான் எதிர்பார்த்ததிலும் அதிகமான ஆதரவை நம் "தமிழன்" தமிழுலகத்தாரிடமிருந்து பெற்றிருக்கின்றான். எனது இம்முயற்சியை நன்கு மதித்தும், இயன்ற உதவிகளெல்லாம் புரிவதாக உறுதிவாக்களித்தும் பெருந்தகையாளர் பலர் எனக்குக் கடிதங்களு மனுப்பியிருக்கின்றனர். அவைகளையெல்லாம் ஒருங்குசேர்த்து இப்பத்திரிகையின் அனுபந்தமாக வெளியிடவும் எண்ணியுள்ளேன். "தமிழனை" எவ்வாற்றானும் பொலிவுற்றிலங்கச்செய்வதே எனது பேராசை. எத்துணைத்துன்பம் வரினும் விடாதுழைத்து, தமிழனைப் பின்னும் வெளியிடமுற்பட்டதற்குக் காரணம் நம் தாய் மொழியான தமிழின் மீது எனக்குள்ள பக்திப்பெருக்கும், தமிழுலகத்தார் நல்வாழ்வில் எனக்குள்ள விருப்பமிகுதியுமேயன்றி, கேவலம் பொருளீட்டல் மட்டுமல்லவென்று

எனது உள்ளநிலைமை உள்ளபடி அறிந்தோரும் சர்வசாட்சியான சர்வே சுவரரும் நன்றகறிவர் தமிழனது வாழ்வே எனது வாழ்வு. நம் "தமிழன்" நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய்த் திருத்தமுற்றோங்கத் திருவருள் புரியவேண்டுமென்பதே நான் அல்லும் பகலும் ஆண்டவனடிபணிந்து மன்ருடிச்செய்துகொள்ளும் பிரார்த்தனை. தெய்வத் திருவருளும் என்வழி நிற்கின்றதென்பதற்குப் பல அறிகுறிகளும் தோன்றி வருகின்றன. ஈசனருளாலும் நமது பத்திரிகாபிமானிகளின் ஆதரவாலும் நம் "தமிழன்" இன்னுஞ் சிலநாளில் வடிவிலும் பண்பிலும் வளர்ச்சியடைந்து பொலிவானென்று உறுதிவாக்களிக்க நான் சக்தியுடையவனுயிருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இதுகாறும் நம் பத்திரிகையை ஆதரித்துவரும் நல்லறிவாளருக்கு வந்தனமளித்து இம்மாத சரிதையை முடிக்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்".

மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திர விளக்கம்.

"சேமமிகுந் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை யெண்ணுதொறுங்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
வேமமிகு கற்புடையா ளின்பினுமின் பெய்துவதே"

என்று ஸ்ரீமத்இராமலிங்கசுவாமிகள் வியந்து கூறுவதுபோல் நம் கருங்கல்மனமும் கரைந்துருகச்செய்த, 'கல்லைப்பிசைந்து கனியாக்கித்தன் கருணை வெள்ளத்தழுத்தி வினை கடந்த வேதியனு'கிய மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திரத்தை ஒருவாறு விளக்குவான் புகுந்தனம்.

இம்மகானுடைய சரித்திரம் முழுதும் அறியக்கூடாத நிலைமையிலிருக்கின்றது. இவரைப்பற்றிக்கூறும் வரலாறுகள் எவ்விதம் மதிக்கப்படினும் தென் இந்தியா புத்தமதத்திலிருந்து ஈடேறுவதற்கும், சைவமதஸ்தாபனம் செய்வதற்கும் காரணபூதராயிருந்த மகான்களில் இவரும் ஒருவர் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

அவர்காலந்தான் எதுவென்று நோக்குவோமாயின் அஃதோர் பெருந் தருக்கவிஷயமாகவே முடியும். கிறிஸ்து பிறப்பதற்குமுன் முதல் கி. பி 13-வது நூற்ருண்டு வரை முன்னும் பின்னும் அவரைத் தள்ளி வந்தார்கள்.

கனம் தங்கிய கெ. ஜி. சேஷய்யரவர்கள் பிரபல ஆராய்ச்சி செய்து மாணிக்கவாசக சுவாமிகள் கி. பி 4-வது நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்திருக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்கள்.

சுவாமிகள் காலத்தில் புத்தமதம் தென் இந்தியாவில் க்ஷீணதிசையடைந்திருந்ததென்பது.

புத்தன் முதலாய புல்லறிவிற்பல் சமயம்
தத்தம்மதங்களில் தட்டுளுப்புப்பட்டுநிற்க
சித்தஞ்சிவமாக்கி செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினாற்றோணோக்கமாடாமோ.

என்னும் சுவாமிகளது பாடலாலே தெரியக்கிடக்கின்றது. மேலும் இவர்கள் புத்தரைவாதில் வென்றதாகச் சொல்வதிலுங்கூட. ஈழ நாட்டிலிருந்து புத்தர் வந்தார்களென்று கூறுவதால் புத்தமதம் இந்தியாவில் இருந்தொழிந்ததென்றே தீர்மானிக்கலாகும்.

இனி அக்காலந்தான் எதுவென்று நோக்கும்வழி அது கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முன் என்பது ஹையூன்த்ஸங், போன்ற பிரமாணிகள் எழுதி வைத்த சரித்திரங்களால் தெளிவாகின்றது.

அவர் காலம் பத்தாவது நூற்றாண்டுக்குப் பின்னில்லையென்பது, காலஞ்சென்ற கனம் வெங்கய்யரவர்கள் தங்கள் வருஷாந்தர விவரணப் பத்திரிகையில் **1135**-வது வருஷத்தில் விக்ரமச் சோழன் என்னும் அரசன் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருச்சாழல் பாடுவதற்கு ஓர் ஏற்பாடு செய்ததாகவரைந்துள்ள சாஸனம் கண்டதாக எழுதியிருக்கின்றதினால் விளங்கும். ஆகவே 12-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர் ஓர் மகா கவியானது மன்றி அவரைப் பெரியதோர் மகானை கொண்டாடத்தொடங்கினார்களென்றும் தெரிவதால் அதற்கு வெகுகாலத்துக்கு முன்னமே அவர் இருந்து கீர்த்தி பெற்றிருக்கவேண்டும். மேலும் ஞானசம்பந்தர் காலத்தில் அரசாண்டதாகக் கூறப்படும் கூன்பாண்டியனுக்கும், மாணிக்கவாசக சுவாமிகளை மந்திரியாக வைத்துப்பார்க்கப் பாக்கியம் பெற்ற அரிமர்த்தனபாண்டியனுக்கும் இடையில் 10 அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 25 வருஷம் வைத்துக்கொண்டாலும் ஞானசம்பந்தருக்கு 350 வருஷத்துக்கு முன்பாவது மாணிக்கவாசகசுவாமிகள் வாழ்ந்திருக்கவேண்டுமென்று அறியலாம். இனி அவர்காலந்தான் எதுவென்று நோக்கும் வழி, அது ஏழாவது நூற்றாண்டென்று ஒருவாறு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஞானசம்பந்தரும் சிறுத்தொண்டரும் ஏககாலத்தினரென்பது பெரியபுராணம் சிறுத்தொண்டநாயனார் சரித்திரத்தில் "அந்நாளில் சண்பைநகராண்டகையாரெழுந்தருள முன்னாகவெதிர்கொண்டு கொடுபுகுந்து முன்னால் சேர்போன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகாவலனார்தநன்னாமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்." என்னும் பாடலால் சம்பந்தர் சிறுத்தொண்டரைக் கண்டதும் அவர் உபசரித்தேற்றதும் தெரியவரும். இனி சிறுத்தொண்டர் புலிகேசியென்னும் அரசனுக்கு அணுக்கராயிருந்ததும் வாதாவியென்னும் நகரத்தைப் பாழாக்கியதும்.

" மன்னவர்க்குத்தண்டு போய்வடபுலத்துவாதாவித்
தொன்னகரந் துகளாகத் துணைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
மின்னன வெண்ணிலக வந்திங்கியலரசன் முன்கொணர்ந்தார்"

என்னும் பாடலால் அறியலாம். இவ்விதம் வாதாவியென்னும் நகரம் நீறுபட்டது 7-வது நூற்றூண்டிலென்று தேச சரித்திர மூலம் ஸ்திரப்பட்டதினுல் அவருடன் ஒருங்கிருந்த சம்பந்தர்காலமும் 7-வது நூற்றூண்டென்றும் அவர் காலத்தரசாண்ட கூன்பாண்டியனுக்குப் பத்துத் தலைமுறைக்கு முன்னுய் அரிமர்த்தனபாண்டியன் 4-வது அல்லது 5-வது நூற்றூண்டில் தான் இருந்திருக்க வேண்டுமென்றும் ஒருவிதம் ஊகித்தற்கு இடமுண்டு. ஆகவே அவ்வரசனுக்கு மந்திரியாயிருந்த மாணிக்கவாசக சுவாமிகளும் 4-வது நூற்றூண்டின்பிற்பகுதி அல்லது 5-வது நூற்றூண்டின் துவக்கத்திலிருந்திருக்கவேண்டுமென்பது தெளிவாகின்றது.

இதுவன்றி, 3-வது நூற்றூண்டுக்கு சமீபத்தில் மாணிக்கவாசகரென்பார் ஒருவர் மலைநாட்டுக்கு வந்து மந்திரவாதம் செய்தும், தம் மந்திரோச்சாடனத்தால் மனிதனுக்கும் மிருகங்களுக்குமுள்ள வியாதிகளை நீக்கியும், விபூதிருத்திராக்ஷமகிமைபோதித்தும் அனேக கிறிஸ்தவர்களை இந்துக்களாக்கி விட்டார் என்றும் அவர்களுக்கு மணிக்கிராமக்காரர்களென்று பெயரென்றும் கிறிஸ்தவப் பள்ளி சரித்திரம் நோக்கியுள்ளார் கூறுகின்றூர்கள். இதனை விவரித்துப் பின்னர் கூறுதும். ஆகவே சுவாமிகளதுகாலம் 3-வது நூற்றூண்டுக்கும் 5-வது நூற்றூண்டுக்கும் மத்தியிலிருக்குமென்று ஊகித்துக்கொள்ளலாகும்.

என்றூலும் இதில் அநேகம் சந்தேகங்கள் உள்ளன.

1. ஆயின் 7-வது நூற்றூண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து இறைவனருளால் திருத்தொண்டத்தொகை கூறுவான் புகுந்த சுந்தரமூர்த்தி நாயனுர் இவர் பெயரைக் கூருது விடக் காரணமென்ன?

2. தேவாரம் பாடிய மூவரும் இவரைப்பற்றி ஒன்றும் கூருதிருக்கவும், இவர் ஒரோவிடத்தில் அவர்களைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறூரல்லவா.

3. பெருந்துறையென்று வழங்கப்படும் ஆவுடையார் கோயிலில் கோயில் மாணிக்கவாசகசுவாமிகளால் கட்டப்பெட்டதென்று சரித்திரம் கூறுகின்றது. அந்தக் கட்டிடம் காணுங்கால் நவீனமாகத் தான் இருக்கவேண்டுமென்று அறிந்தோர்கூறுவதால் இவரும் சமீபத்திலல்லவோ இருந்திருக்கவேண்டும்.

4. சுவாமிகள் சிதம்பரத்தைப் பொன்னம்பலம் என்று கூறுவதால், 10-வது நூற்றூண்டில் அரசாண்ட 1-வது பராந்தகன் சிதம்பரம் கோயிலில் பொன்கூரை வேய்ந்ததின்பின்னல்லவோ வாழ்ந்திருக்கவேண்டும்.

5. மாணிக்கவாசகசுவாமிகள், தமதுதிருக்கோவையாரில் வரகுணபாண்டியனுக்கு சிவலோகம் வருத்தியதாகக்கூறுகின்றூர். அவன்காலம் 9-வது நூற்றூண்டாகவே இவர் காலம் அதற்குப் பின்னல்லவோ.

6. தேவாரத்துக்குப்பின் திருவாசகமென்று சொல்வதும் வைதிகமுறையில் சம்பந்தர் மற்றுமுள்ள நாயன்மார்களுக்குள்ள நிலைமை இவர்க்கில்லாததும் நோக்குங்கால் இவர் அவர்களுக்குப் பிற்பட்டவரென்று தோன்றவில்லையா.

என்று பல தருக்கங்கள் சிறிது உண்டாகலாம். அவற்றை ஒருசிறிது நோக்குவோம். சுந்தரமூர்த்திநாயனுர் அவரைப்பற்றிக்கூருததால் அவர்பின்தான் இருந்திருக்கவேண்டுமென்று நினைப்பது தவறென்பார் ஒரு சாரார். இவரினும் எத்தனையோ யோக்கியதை குறைந்ததொண்டர்களையுமன்றி அவர்கள் சரித்திரத்தை

யும் ஒரு சில பதங்களால் சுருங்கச் சொல்லி அழகமைத்தவர், கேட்டோர் மனம் கரைந்துருகப்பாடியதுமன்றி, பாண்டியராசனுக்கு முதன் மந்திரியாயிருப்பதை யும் கவனியாமல் பரமாசிரியனை அடைந்தவுடன.

''திருத்திகழ் கவிகைக்கீழுஞ்சிறநதபொற்சிவிகைமேலும்
வருத்திருமேனத்தானை மன்னவனென்னவந்தா
ருருத்தெரியாத நீறும் கோவணவுடையுங்குஞ்சி
விரித்துள சிரமும் தூநீர் மிகப்பொழிவிழியுமானூர்.

என்றவண்ணம் உருத்தெரியாத நீறும்மற்றும் பூண்டு பக்திவைராக்கியம்கொண்டு திரிந்தாரை சுந்தரர் அறிந்தலர் என்பது சுந்தரர்க்கு மடமை கற்பித்தது போலாகுமென்பார் மற்றொருவர். இவ்வாறு கற்பிக்கயாரும் துணியார்.

கனம். K. G. சேஷய்யரவர்கள் சுந்தரர் தமது திருத்தொண்டத்தொகையில் பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன் என்று கூறியது மாணிக்க வாசக சுவாமிகளையென்று கூறுகின்றார்கள்.

இந்த அடிக்கு நம்பியாண்டார் நம்பிகொள்ளும் பொருளாவது.

தரணியிற் பொய்மையில்லாத்தமிழ்ச் சங்கமதிற்கபிலர், பரணர்நக்கீர் முதனாற்பத்தொன்பது பல்புலவோர், அருள்நமக்கீயும் திருவாலவாயான் சேவடிக்கே, பொருளமைத்தின்பக்கவிபல பாடும் புலவர்களே என்பது.

கனம்சேஷய்யரவர்கள் கூறும் நியாயமாவது பொய்யடிமையிலலாத புலவர் என்னும் பதம் கடைச்சங்கத்திலிருந்த புலவரெனக்கொள்ளின் கடைச்சங்கத்திலுள்ளார் நாற்பத்தியொன்பதின்மரும் சைவராமோ. அதில் புத்தரும் சமணரும் கலந்திருக்க நம்பியாண்டார்நம்பி கூறியவாறு ''நாற்பத்தொன்பதுபல்புலவோர்'' எனக்கூறியது தவறு என்று வாதிக்கின்றார்கள். மேலும் அடியார்கள் தொகை கூறுங்காலத்து சங்கம் மருவியிருந்த புலவர்களைக்கூற நேர்ந்ததென்ன! என்பதும் அவர்கள் கேள்வி. ''பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன் பரமனையேபாடுவார் எல்லார்க்குமடியேன்'' என்றும் பொதுப்படக்கூறியது வேறிருக்க பொய்யடிமை யில்லாத புலவரென இருமுறைகூறவேண்டிய அவசியமுமில்லை.

ஒரே பொருள்பட சுந்தரர் இருமுறை கூறினாரென்றலும் பொருந்தாது. மேலும் நம்பியாண்டார் நம்பி தாம் கூறிய திருவந்தாதியில் – ''கூட்டம் ஒன்பானோடு அறுபத்திமூன்று தனிப் பெயரா வீட்டும் பெருந்தவத்தோர்.'' எனக் கூறியவாறு சுந்தரமூர்த்திநாயனார் 63 அடியார்களைப் பாடியதாகக் கருதும் வழி, திருத்தொண்டத்தொகையில் 62 தனிப் பெயர்களே காணப்படுகின்றன. ஆகவே பொய்யடிமையில்லாத புலவரென்பது தனிட்பெயராம். அஃது மாணிக்க வாசகஸ்வாமிகளையே குறித்து நின்றதென்பார்கள்.

நம்பியாண்டார்நம்பி பொய்யடிமையில்லாத புலவரென்பது நாற்பத்தொன்பது சங்கப் புலவரையும் கருதிநின்றதெனப பொருள் கூறுவது தவறேயாம். மேற்கண்ட நாற்பத்தொன்பதிமருள் புத்தரும் சமணருமாய் பொய்யடிமை கொண்ட புலவர்நீக்கி மீதிய சைவப்புலவரையே 'பொய்யடிமையில்லாத புலவ'ரென சுந்தரர் கூறினாரெனல் ஒருசிறிது பொருந்தும். இக்கருத்துப்பற்றியே பொய்யடிமையில்லாத புலவருக்கு, பொருள்கூறுவான் புகுந்த உமாபதி சிவ

சாரியார் தமது திருத்தொண்டர் புராணசாரம் ௬௪-வது பாட்டில், புலவர்களின் தொகையொன்றும் குறியாது.

பொய்யறியாக்கபிலரொடுபரணராதி,
புலவோர் பாற் பல்கலைகள் பொருந்தவோதி,
செய்யுளிடை வளராசு மதுரநல்ல
சித்திர வித்தாரமெனத் தெரிக்கும் செம்மை,
பெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றுளாடல்
மேவிய கோனிருதாளில் விரவச்சாத்தி,
கையுடை யஞ்சலியினராயருளான் மேலைக்
கருதரியஅமருலகங் கைக்கொண்டாரே.''

எனப் புலவர்கள் பலருள் சிவனடியார்களை மட்டிலும் சுட்டிக்காட்டினதாகக் கூறினர்.

இவ்வாறே, பொதுவடியார்கள், தனியடியார்கள் தொகைகுறிக்குங்கால் சுந்தரமூர்த்திநாயனர் 63 நாயன்மாரைப் பற்றிக் கூறினரெனப் பொருள்பட
''தவத்திருத்தொண்டத் தொகைப் பதினொன்றின் வகை பாட்டும்
திகழ்த் திருநாவலூராளி பணித்தனனே.' எனப் பாட்டும் எழுதிவைத்தார்.

இனி இவர் கூறியவாறு 63 நாயன்மார்களைப் பற்றி சுந்தரர் கூறினரென்றும் பொய்யடிமையில்லாத புலவரென்பது பொதுப் பெயரென்றும் பொருள்கொள்வோமாயின் அவர் தம்மையும் மெய்யடியார்களுள் ஒருவராக நினைத்தாரெனக் கருதல்வேண்டும். தம்மையெப்பொழுதும் இகழ்ந்து பேசும் இயல்புடைய சுந்தரர், கண்ணப்பர் முதலாயரோடு ஒப்புமைபாராட்டி யேதமபட்டாரெனலும் பொருந்தாதென்று நினைக்கின்றேன். அதுவன்றி நாயன்மார் 63வரென்பது நம்பியாண்டார்நம்பி காலந் தொட்டுத்தான் வழங்கத் தொடங்கிற்று எனக் கூறுவதால் வரும் இழுக்கென்னை.

ஆயின் சுந்தரர் தம்மையொழித்து மாணிக்கவாசக சுவாமிகளைச் சேர்த்து 63 நாயன்மாரைப் பாடியிருக்க, பினவந்தார் அவ்விதப் பொருள்கொள்ளவறியாது, சுந்தரரைச் சேர்த்தும் மாணிக்கவாசகரை நீக்கியும் விட்டார்களெனப் பொருள் கொள்ளலாமோ வென நோக்குவோம். திருவிளையாடல் புராணக்காரர் இவரை மெய்யடியான் பாடல் மாமுனிவர் என்று கூறுவதால் தாம் கூறிய கூற்றுக்குப் பலம் உண்டாகிறதென்று நினைக்கிறார்கள் கெ. ஜி. சேஷய்யரவர்கள். ஆம் அது மெய்யே.

அப்பருக்கெண்பத்தொன்று அருள்வாதவூரருக்குச்
செப்பியநாலெட்டில் தெய்வீகம். என்றும்,

சித்திரை சதயமப்பர் சிறந்த வைகாசி மூலம் அத்தரைப்
பணிசம்பந்தர் ஆனிமாமகத்தில் அந்த முந்தமிழ்வாதவூரர்

என்னும் பாடல்களில் வாதவூரருக்கு கொடுத்திருக்கக் கூடிய அடைமொழிகளாய 'அருள்' முத்தமிழ்'' என்னும் பதங்களும் மேற்கூற்றை வற்புறுத்துகின்றன.

(தொடரும்)

என். சுந்தரமய்யர்.

கல்வி.

கல்வியென்பது என்னை? அது ஒரு பெயர்ச்சொல். பெயர்ச்சொல்லென்றால் "பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலின் வருபெயர்" என்ற சூத்திர போதங்கொண்டு இவ்வாறன் கூட்டத்துள் எதாவது ஒன்றன் பெயராய் வருவதாம். அல்லாமலும் இவ்வாறனையும் பொருள், குணம், தொழில் என்னுமூன்றனுள்ளடக்கி அம்மூன்றனுள் ஒன்றன் பெயராய்வரும் என்று சொல்வாருமுளர். எப்படியானாலுஞ் சரி.

இங்கே கல்வியென்பது பொருட்பெயரா? குணப்பெயரா தொழிற்பெயரா? என்று விசாரிக்குங்கால் நமது பாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார் கொன்றைவேந்தனில் "கைப்பொருள்தன்னின் மெய்ப்பொருள்கல்வி" என்று போதித்திருப்பதால் கல்வியென்பது பொருட்பெயரென்றாகிறது. அதுகற்றல் என்னுந் தொழிற்பெயரினின்ற "கல்" என்னும் பகுதி "வி"வ்விகுதி பெற்றுக் கல்வியென்றாயிற்றென்பார் பெரியோர். மேற்சொன்ன பாட்டால் கல்வியானது மெய்ப்பொருளாயுங்கொள்ளப்பட்டது. கைப்பொருளென்றதனால் ஒவ்வொருவருமாவசியகமாகச் சம்பாதித்து வைத்துக் கொள்ளக்கூடிய பொருளென்று தெரியவருகிறது. அத்தகைய கல்வியை மெய்ப்பொருளென்றது எதுபற்றியெனின் யோசிப்பாம்.

"வெள்ளத்தாலழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலுநிறைவன்றிக்குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோமிகவெளிது கல்வியென்னு
முள்ளபொருளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருள்தேடியுழல்கின்றீரே

என்றபடியழியாமையையுடைய பொருளாதலின் அது மெய்ப்பொருளெனப்பட்டது. அதனால்.

அழிவுடைய செல்வப்பொருளொன்றனுண்மையும் நமக்குத்தெரியவருகிறது. செல்வப்பொருள் அழிவுடையது என்றாகவே அது பொய்ப்பொருளென்பது ஸ்திரப்பட்டது. படினும் பொய்ப்பொருளாகிய செல்வப்பொருளும் மெய்ப்பொருளாகிய கல்விப்பொருளும் அவ்விரண்டுங் கைப்பொருள்களாமென்றே நமது பாட்டியார் வாக்கினாலே நாம் தெரிந்து கொண்டோம். ஆகவே இவ்விரண்டனுள்

மெய்ப்பொருளெனப்பட்ட கல்வியே நான் எடுத்துக்கொண்ட விஷயமாதலால் அதனைப்பற்றி விசாரிப்பாம். இவ்வளவில் நாம் தெரிந்துகொண்டதென்னவென்றால்:—

1. கல்வியென்னுமொருவார்த்தை பெயர்ச்சொல்லாமென்றும், அதுவும் பொருட்பெயராமென்றும், அதுவு மெயப்பொருட்பெயராமென்றுமேயாம்.

இனி கைப்பொருள் இரண்டனுண்மை கேட்கப்படுதலால் மனிதனுவான் ஒருவனுக்கு இரண்டு பொருள்களு மாவசியகந்தானோ? வென்றால் மனிதன் சரீர சரீரி அல்லது தேகதேகியென விருதிறப்பட்டிருக்கிறான். ஆகவே இருதிறப்பட்டுள்ள மனிதனுக்கு இவ்விருதிறத்துப் பொருள்களு மாவசியகமேயாம். அவற்றுள் பொய்ப்பொருளாகிய செல்வப் பொருள் நேற்றிருந்தானின்றில்லை என்றுசொல்லுதற்கு முன்னிலைப்பட்டுநின்ற சரீரம் அல்லது தேகம் அழிவுடைத்தாதலால் அவ்வழிவுறுதேகப் பாதுகாப்பிற் கின்றியமையாததாயிருக்கின்றது. அதுபோல் சித்துப் பொருளாய் அழிவின்மையையுடைய ஆன்மரட்சிப்பிற்காக உண்மைப் பொருளாகிய கல்விப்பொருளுமின்றியமையாததேயாகும். நாம் பேசத் துணிந்தது கல்வியைப்பற்றி மாத்திரமேயானுலும் பொய்ப்பொருளாகிய வுலகத்தைக் கொண்டே மெய்ப்பொருளாகிய கடவுளின் பெருமை நமக்குப்பேசவருகிறதுபோல, பொய்யாகிய செல்வப்பொருளை வைத்தே மெய்யாகிய கல்விப்பொருளின் பெருமையை விஸ்தரிக்கவேண்டியிருக்கிறது. எப்படிக்கடவுளை யறிவதற்கு உலகமாவசியகமானதோ அதுபோலவே கல்வித்தேர்ச்சிக்கும், அதன் நிலைபேற்றிற்குஞ் செல்வப்பொருளாவசியகமாயிருக்கிறது. ஆகையால் செல்வப்பொருளின் சகாயத்தைக்கொண்டே கல்விப்பொருள் சம்பாதிக்கக்கூடியதென்பதுந் திண்ணமாயிற்று.

2. இங்கே, கல்விப்பொருள் செல்வப்பொருளுதவியுள்ளாருக்கே கைவாநமென்பதும், இரண்டு பொருள்களு மனிதனுவானொருவனுக்காவசியகமாமென்பதும் நாம் நன்கு தெரிந்துக்கொண்டோம்.

இதன்மேல்:—

"இருவிழிகள் வாண்முகத்திலிருந்தாலும் வானிரவியெழுந்தாலன்றிக்
கருதுநிலைப் பல பொருளுங்காண்டலரிதாமுலகின் கண்போல்யாரும்
பெருகிய செல்வமு மறிவும்பெற்றாலும் நூற்கேள்விபெறுவார்க்கன்றி
திருவளர் புண்ணியம் பாவமிம்மை மறுமையும் வீடுந்தெரியாவன்றே"

என்ற குற்றாலத் தலபுராணத்திருவாக்கால் ஒளியுடைய முகத்தி லே ஒளியுடைய விரண்டு கண்களிருந்தாலும், ஆகாயத்திலே காணப் படுகிற சூரிய னுதயமாகாமற்போனால் மதிக்கத்தக்க உலகத்திலே யுள்ள பலவகைப்பட்ட பதார்த்தங்களையுங் காணுதலரிதாகும். அது போலவே எவரும் அதிகமான செல்வத்தையும் விசாலமான அறி வையு மிரண்டு கண்களுக்கொப்பாகப்பெற்றிருந்தாலுஞ் சூரியனுக் கொப்பான சாஸ்திர விசாரணை (கல்வியறிவு) பெற்றிருக்கிறவர்களுக் கல்லாமல் (மற்றவர்களுக்கு) ஆக்கமதிகரிக்கத்தக்க புண்ணியமும், கேட்டைத்தருகின்ற பாவமும், இகபர சுகங்களும், மோட்சவாழ்வும், அறிய முடியாது என்று நமக்கு விளங்குகிறபடியால் செல்வப்பொ ருளைக்காட்டிலுங் கல்விப்பொருளே விசேஷமானதென்று ஸ்பஷ்டமா கிறது.

3. பொய்யைக்காட்டிலு மெய்யே மேலானதென்பதுலகறிந்த வுண்மையாதலி னிதிலொரு ஆச்சரியமுமில்லை யென்பது நாமறியத் தக்கது.

இப்போது சொல்லிய கவியில் செல்வம், அறிவு என்கிற இர ண்டனையுமிருவிழிகளாகவுவமிக்கப்பட்டது. இருந்தாலும், கல்வியே கண்ணென்று சொல்லும் வாக்கியங்களுமுள. அவை:—

"எண்ணு மெழுத்துங்கண்ணெனத்தகும்."

"எண்ணென்பவேனையெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்பவாழுமுயிர்க்கு."

"கண்ணுடையரென்பவர்கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்பனவாம்.

இவ்வாக்கியங்களால் கல்வியென்பது எண்ணுமெழுத்துமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கல்வியென்றால் கற்கப்படுவது என்று பொருள்படும். படவே கற்கப்படுவன எண்ணுமெழுத்துமென விரு வகைத்தாம். அவை:—

"காண்டலநுமானங்கதை யருத்தாபத்தியிவை
யீண்டிசைத்த வெண்ணெனவே யெண்."
"வழுப்பதத்தைவாக்கினுக்குமாற்றி வரமாக்கு
மெழுத்தெழுவாயைந்து மெழுத்து" என்னும்

பரமத்திமிரபாநுத்திருக்குறளின் வாக்கியங்களால் விளங்குவ னவாம்.

4. இவ்வளவில் கல்வியே கண்ணுமென்பதும் ஆன்றோரால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. கல்வியில்லாதவர் குருடரென்பதை நாமிதனாலேயே நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறோம்.

அந்தவுண்மைகொண்டே அறிவாளிகளெல்லாரும் தாம்பெற்ற பிள்ளைகளைக்கண்ணைத்திறந்து வைக்கிறார்கள். அதாவது படிப்பிக்கிறார்கள். அப்படிக்கண்ணைத்திறந்து வைக்கவில்லையானால்.

"மாலினாலிருவரு மருவிமாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியாதுயர்
தாலமேற்செல்வமாவளர்த்தல் தங்கட்கோர்
காலனைவளர்க்கின்ற காட்சிபோனுமே."

"தீதுநன்றறிகிலாச்சேயரென் செய்வார்.
கோதறவவரை நன்னெறியிற்கூட்டிடா
தேதங்களவர்முன்செய் திழிவைக்கற்பிக்குந்
தாதைதாய் புதல்வர்க்குச்சத்துருக்களே." என்றபடி.

பிள்ளைகள் பெற்றோருக்கு எமனைப் போலவும், பெற்றோர் பிள்ளைகளுக்குச் சத்துருக்களாகவு மாய்விடுவார்களென்னலாம். அதுமாத்திரமா! படியாமற் போனானு முயர்குடிப்பிறப்பினுள்ள பிள்ளைகளுக்கு வழக்கபழக்கங்களாலறிவு தலையெடுக்கும்போது:—

"கடுக்க னிட்டாலென்ன பொன்னரைஞாணுடன் கைக்கிரதந
அடுக்குவளை திருவாழி யிட்டாலென்ன வன்புடனே
யிடுக்கிவளர்த்தென்ன சோறூட்டியென்ன எனக்கிரங்கிப்
படிக்கவைத்தானில்லையே பிதாவாகிய பாதகனே." என்றும்

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாய்க்
கொள்ளிக்கும்பட்ட கடனுக்கு மென்னைக்குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்குவைத்தானில்லையே பிதாவாகிய பாதகனே."

என்றும் பற்பலவிதமாய் திட்டநேரிடுமென்பதும் நமக்குத் தெரியவருகிறது. அப்படித் திட்டுகிறது பிள்ளைகளுக்குக் குற்றமாமோவெனில்:—

"கல்லாது நீண்டவொருவனுலகத்து
நல்லறிவாளரிடைப்புக்கு—மெல்ல
இருக்கினும் நாயிருந்தற்றே யிரா
துரைப்பினு நாய் குரைத்தற்று"

"நாற்பாற்குலத்து மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே"

"கற்றிலாய் கலை கற்றுணரார்முகம்
உற்றுநோக்கின் மயானத்தையொக்குமால்
பெற்றுளார் பெறும் பேறு தங்காதலர்
சொற்றகல்வியிற் றாயரென் றோதலே"

என்ற போதங்களின்படி படித்தவர்களால் நாயென்று மதிக்கப்படவும், அவர்களுக்கு முன்பாகக் கீழ்மைப்படவும், தம்முகத்தைச் சுடுகாட்டுக்கொப்புக் கூறவுமுள்ள தரத்தில் மக்களை வைத்த பெற்றோர்களை அவர்கள் திட்டுகிறது பாவமாகமாட்டாது. ஆனது பற்றியே அறிவாளிகளெல்லாரும் அபவாதத்துக்குள்ளாகாமல் மக்களைப் படிப்பிக்கிறார்கள்.

5. இங்கே சொல்லிவந்த நியாயங்களால் பெற்றோர்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும், படிப்பியாதவர்கள் புத்திரத் துரோகிகளென்றும், நிந்திக்கப்படுவோர்கள் என்றும் தெரியவருகிறது.

அப்படிப் படிப்பிக்கிறவர்களிளம்பிராயத்திலேயே படிப்பித்தால்தான் அந்தக் கல்வி மக்களுக்குப் பிரயோசனப்படுமென்பதுலக மறிந்தவுண்மை. ஆனது பற்றியே:—

1. "இளமையிற் கல்"
2. "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து"
3. "வளையிளமரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும் பொன்
   னிளகியபொழுதணியியற்றலாகு நல்
   வளமுறுகேள்வி நூல் மாண்பு நற்குணம்
   இளமையினன்றி மூப்பெய்தி னெய்துமோ"
4. "தண்டிலே வளையாது தடியிலே வளையாது"
5. "பிள்ளைப் பிராயம் பள்ளி புகு"

என்பனவாதிய வாக்கியங்கள் ஆன்றோர்களால் வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. அழுக்கற்ற வெள்ளைப் புடவையில் சாயமேற்றினால் நன்றாய்ப் பிடித்துக்கொள்ளுகிறது. அழுக்குப்படிந்த புடவையில் சாயம்பற்றாதானபடியால் அதில் ஏற்றுகிற வழக்கமில்லை. அது போலவே பிரபஞ்ச வாழ்க்கையில் மூழ்கிப் பல கவலைகள் மேற்கொண்டு மனம் புண்படிந்து கிடக்கிற முதுமைப் பருவத்தில் கல்வியறிவு உண்டாகமாட்டாது. ஆனபடியால் யாதொரு கவலையும் படி

யாது சுத்தமாய்க் கண்டது கலக்கும் படிகம்போலுள்ள மனதோடு கூடிய இளமைப் பருவத்தில்தான் மக்களைப் படிப்பிக்கவேண்டுமென்பது ஆன்றோர் துணிபு. அவ்வாறு செய்கிறவர்கள்தாம்

"தந்தைமகற்காற்று நன்றி யவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்னும் வேதபோதத்தின்படி பெற்றோர் கடமையை நிறைவேற்றுகிறவராவார்கள். அங்ஙனம் படிப்பிப்பது பெற்றோர் கடமையாயிருந்தாலும் மக்களின் முயற்சியுங் கூடி இளமைப் பருவத்தை வியர்த்தமாக்காமல் கல்வியிற்பயின்றுதேர்ச்சியடையவேண்டியது ஆவசியகமேயாம். அப்படியானல் இரும்புத் துண்டில் காந்தச் சத்தை ஏற்றியபின் அது இதர இரும்புத் துண்டுகளைத் தன் வசமாயிழுத்துக் கொள்வதுபோலவும், ரயில்வே இஞ்சினுக்கு நீராவியின் சக்தியை யூட்டியபின் யாவரும் வியக்கத்தக்க அற்புத நடை நடப்பது போலவும், மனிதனுக்குக் கல்வியென்னுஞ் சக்தியமைந்தபின் ஆச்சரியப்படத்தக்க காரியங்களெல்லா மவனிடத் துண்டாகின்றன. பொன் வெள்ளி முதலான உலோகங்களையெடுத்துக் காய்ச்சித் திரட்டியபின் அவைகளுக்குப் பிரகாசமுண்டாகி யாவரும் மதிக்கத்தக்க பொருள்களாகின்றன. கல்லுருவமாயிருக்கும் மணிகளும் சாணையில் தைத்துத் தேய்க்கப்பட்ட பிறகு அவைகளுக்கு பிரகாசமு மதிப்புமுண்டாகி அரசர்களின் கிரீடங்களிற் றரிக்கும்படியான பெரிய அந்தஸ்தை அடைகின்றன. இதுபோல கல்வியறிவுடையானெருவனே யாவராலும் விரும்பப்பட்டவனுகவும், யாவருக்கும் பிரயோசனமுள்ளவனுகவும் மதிக்கப்படத்தக்கவனுகவுமாகின்றுன்.

இன்னும்வரும்.

த. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை.
பேட்டை.

பூவரசு.

உண்டாகும்விதம்:— காயும் வித்தும் பூவரசில் உண்டு. ஆனல் வித்து ஏராளமாயகப்படுவதில்லை. இதன் வித்து கடுகளவாய் உருண்டு கறுத்திருக்கும். ஒரு காய்க்குள் அனேக வித்துகள் காணப்படும். வித்து மிகவும் சிறியதானபடியால் இலேசாய் அழிந்துபோகக் கூடியது.

வித்திலிருந்து இந்த மரத்தை உண்டாக்கவேண்டுமானுல் அதிக பிரயாசை உண்டு. ஆழமான ஒரு குழிவெட்டி எருவிட்டு வித்தை ஊன்றித் தண்ணீர்விட்டு வரவேண்டும். சிலநாளில் முளைகிளம்பி கன்று வெளியாகும். கன்றுகாலிகள் தின்னுமல் வெகு பத்திரமாய் அடைத்துத் தண்ணீர் விடவேண்டும். அப்படிப் பாதுகாத்துவந்தால் கொஞ்சநாளைக்குள் ஓங்கிவளரும். நுனிக் குருத்து அழியாமல் இருக்குமானுல் ஒழுங்காய் வளரும்; கவர் இலேசில் அடியாது.

இதற்கு வித்திருந்தாலும் பொதுவாய் ஜனங்கள் இதை வித்திலிருந்து உண்டாக்குவதில்லை. ஏனென்ருல் கன்றுகாலிகள் இந்த இலைகளைத் தின்னும். ஆகையால் இதைப் பாதுகாப்பது வருத்தம். இதனுலேயே பூவரசின் கொம்புகள் இயல்பாகவே தளிர்க்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. பூவரசின் கம்பை நாம் நடும்போது அது கன்றுகாலிகளுக்கு எட்டாத உயரத்தில் இருப்பதனுல் பூவரசின் கம்புகள் இலேசாய்த் தழைத்து வளருகின்றன.

கம்புவைக்கும் விதம்:— முதலாவது தளிர்க்கக் கூடிய இளங் கம்புகளைப் பார்த்து மரத்திலிருந்து வெட்டவேண்டும். அவைகளை வடுப்படுத்தக்கூடாது. கூர்மையான ஆயுதங் கொண்டே வெட்டவேண்டும். பிறகு கொம்பிலுள்ள இலைகளை வெட்டிவிட்டு ஆழமாய் நாட்டித் தண்ணீர் விடவேண்டும். ஒழுங்காய்த் தண்ணீர் விட்டுப் பேணிவந்தால் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் கிளை அரக்கலாம். தனிமையாய் நடுவதைப் பார்க்கிலும் நடவேண்டிய கம்புகளையெல்லாம் கொண்டுவந்து கூட்டமாய் ஒரே பண்ணையில் கொஞ்ச ஆழத்தில் மரநிழலில் நட்டு அது வேரூன்றித் தளிர்த்தபிறகு மழைக்காலத்தில் பிடுங்கி நடுகிறதானுல் தண்ணீர்ச்செலவு அதிகம் இல்லாமல் இலேசாய் வளரக்கூடும்.

வேர்:— பூவரசுக்கு ஆணிவேரும் சல்லிவேரும் உண்டு. வேர்கள் அதிக ஆழம் செல்லமாட்டா. கொஞ்ச ஆழத்தில் வெகுதூரம் பரவும் வேர்கள் பருமனுய் இருக்கும். நேராய்ச் செல்லாமல் கோணிக் கோணிச் செல்லும். வேர்கள் பலமுள்ளவை. வேர்களுக்குள் வைரம் இருக்கும்.

பிரகாண்டம்:— பூவரசானது அதிக உயரமாய் வளராது. சுமார் 25 அடி உயரம் வளர்ந்து கவர் அடிக்கும். அடிமரம் அனேக கிளைகளைத் தாங்கவேண்டியிருப்பதால் பருமனுயும் உறுதியாயும் வைரங் கொண்டதாயும் இருக்கும். அடிமரத்திற்குப் பட்டை உண்டு. பொதுவாய் அடிமரம் நேராய்ச் செல்லாமல் அங்குமிங்கும் வளைந்து செல்

னும். இலை இணைகள் தண்டைச்சுற்றி ஒருவிதமான திருகல்வரிசை யாய்ச் சேர்ந்திருக்கின்றன. ஆறு கணுக்களுக்கு ஒருநேர் இலை தோன் றும். நுனிக் குருத்து அதிகத் தெளிவாக இருக்கும். காம்பின் அடியில் கணுக்களின் இரண்டுபக்கங்களிலும் இரண்டு மெல்லிய கூர் மையான புச்சங்களிருக்கின்றன. இவை இளங்கிளைகளில் பெரும்பா லும் எல்லாக்கணுக்களிலும் இருக்கும். இலை முற்றும்போது இந்தக் ணுப் புச்சங்கள் உலர்ந்துபோகும். குருத்துகள் கம்புகளின் நுனி யிலும் கணுச் சந்துகளிலும் காணப்படுகின்றன. பூவரசில் இலை அதி கமாய் காணப்படுவதினாலே அதிகக் குருத்துகள்உண்டு. நுனிக்குருத் துகள் வளரும்போது கணுக் குருத்துகள் வளருவதில்லை. நுனிக் குருத்து மாறியபின்னோ அழிந்துபோன பிறகோ கணுக்குருத்துகள் வளரும். இந்தக் குருத்திலிருந்துதான் மொட்டு, பூ, காய் முதலியன உண்டாகின்றன.

பூவரசின் பூ:— பூ கணுச் சந்திலிருந்து உண்டாகிறது. கணுக் களிலிருக்கும் குருத்து மாறித்தான் பூ உண்டாகிறது. பூவானது விருந்தத்தின் உதவியால் கிளையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. விருந் தமும் கிண்ணிபோலிருக்கிற பாகமும் சேருகிற இடத்திலே சில புச்சங்களிருக்கின்றன. இந்தப் புச்சங்கள் விருந்தப் புச்சங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இளப் பூவில் மூன்று புச்சங்கள் காணப்படும்.

கிண்ணிபோல் காணப்படும் பாகத்திற்குப் புஷ்பகோசமெனப் பெயர். இது பூவரசின் பூவில் வட்டமாய் அழகாயிருக்கிறது. இள மொட்டாயிருக்கும்போது புஷ்பகோசமானது சுமார் எல்லாப் பாகங் களையும் அடக்கிக்கொண்டிருக்கும்.

தளம்:— புஷ்பகோசத்துக்குள்ளே அமைந்திருக்கும் ஒவ்வொரு இதழ்களுக்கும் தளம் என்று பெயர். பூவரசின் பூவில் மஞ்சள் நிற மான ஐந்து தளங்கள் உண்டு.

தளவட்டம்:— பூக்களின் தளங்கள் தனித்தனியே நிமிர்ந்து நிற்கும்போது ஒருவித வட்டமான ஒழுங்கு உண்டாகிறது. இந்த வட்டத்துக்குத் தளவட்டம் என்று பெயர். ஆகவே புஷ்பகோசம் முதல் வட்டமும் தளவட்டம் இரண்டாம் வட்டமும் ஆகிறது.

கேசரக் குழாய்:— இது பூக்களின் நடுவிலிருக்கிற ஒரு உறுப்பு. இது ஒரு குழாய்போல இன்னொரு ஊசிபோன்ற உறுப்பைச் சுற்றிக்

கொண்டிருக்கிறது. இந்தக் குழாய்க்குக் கேசரக்குழாய் என்று பெயர்.

கேசரங்கள்:—கேசரக்குழாயின் வெளிப்புறத்தின் சுற்றிலும் நிற்கிற நூல்போன்ற கம்பிகளுக்கு கேசரங்கள் என்று பெயர். இது பூவின் மூன்றும் வட்டம். இதுபூவின் ஆண்பாகம் என்னப் படும்.

மகரந்தப்பை:—கேசரக்குழாயின் நுனியில் அமைந்திருக்கும் மஞ்சள் நிறமான சிறுசிறு உருண்டைகள் மகரந்தப்பைகள் என்னப் படும்.

கிலம்:—கேசரக்குழாய்க்குள்ளே ஊசிபோல் நிற்கிறஉறுப்பு கிலம் என்னப்படும். இந்தக்கிலம் அடியில் இருக்கிற பிஞ்சுகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இதன் நுனிப்பாகம் தடித்து 5 மேடுகளும் 5 பள்ளங்களும் உடையதாயிருக்கின்றது.

கிலாக்கரம்:—கிலத்தின் நுனிப்பாகத்துக்கு கிலாக்கரம் என்று பெயர்.

அண்டாசயம்:—அண்டங்களை அதாவது முட்டைகளை அல்லது. பூவின் பிஞ்சுகளை அடக்கிக்கொண்டிருக்கும் பூவின் பிஞ்சாகிய பாகத்திற்கு அண்டாசயம் என்று பெயர்.

அண்டகோசம்:—கிலம் கிலாக்கரம், அணடாசயம், ஆகிய இம் மூன்றும் ஒன்ருேடொன்று சேர்ந்திருப்பதால் இம்மூன்றையும்சேர்த்துப்பொதுவாய் அண்டகோசம் என்று அழைக்கவேண்டு . இது தான் பூவில் காயாக மாறும் பாகம். இதுதான் பூவின் பெண்பாகம் என்று அழைக்கப்படுகிறது.

பலகுறிப்புகள் (1) பூவரசம் பூவின் தளங்கள் அண்டாசயத்தோடு சேரும் இடத்தில் 5 சிவப்புவர்ணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை பூவிலுள்ள தேனைப் பூச்சிகள் வந்தெடுப்பதற்கு ஏவுங் கருவிகளாய் இருக்கின்றன.

(2) பூவரசின்பூவின் புஷ்பகோசக்கிண்ணத்தின் பக்கத்தில் 5 நுட்பமான பற்கள் தெரிகின்றன. இந்தப்பற்கள் மிகவும் சிறியனவாயிருப்பதால் கூர்மையாய்ப்பார்த்தாலன்றித் தோன்றமாட்டா. இள மொட்டுகளில் இந்தப்பற்கள் தெளிவாய்த்தோன்றும். வளர்ந்தபுஷ்பங்களில் இவை அழிந்து போகின்றன.

3. மூன்ருவது வட்டமாகிய கோசரம் அடர்த்தியாயிருக்கிறது.

4. கிலாக்கரமானது பூவரசின்பூவில் பிரிவுள்ளதல்ல. வெண்டைப்பூ, சப்பாத்துப்பூ முதலிய பூக்களில் கிலாக்கரம் பிரிவுள்ளதாயிருக்கிறது.

5. பூவரசின்பூவில் அண்டாசயத்தில் 5 அறைகள் இருக்கின்றன. இந்த அறைகளுக்குள் அண்டங்கள் அதாவது முட்டைகள் அல்லது பிஞ்சுகள் அமைந்திருக்கின்றன. இந்த அறைகள் எல்லாம் கிலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. இந்தப்பிஞ்சுகள் முற்றி வித்துகள் ஆகவேண்டுமானுல் மகரந்தப்பொடிகள் இந்தப்பிஞ்சுகளோடு கலக்கவேண்டும். இதற்காகவே கிலம் அமைக்கப்பட்டிருக்கிறது. காற்றடிக்கும்போதும் ஈக்கள் மொய்க்கும்போதும் இந்த மகரந்தப்பொடிகள் சிதறுண்டு கிலாக்கரத்தில் இருக்கும் 5 பள்ளங்களிலும் ஒட்டிக்கொள்ளுகின்றன. பின்னர் அவை கிலாக்கிரத்தை ஊடுருவிச்சென்று கிலத்துக்குள் பிரவேசிக்கின்றன. கிலமானது ஒருகுழாய் அண்டகோசத்தோடு சம்மந்தப்பட்டிருப்பதால் கிலத்தின் மூலமாய் அண்டகோசத்திற்குள் மகரந்தப் பொடிகள் கொண்டுவரப்படுகின்றன. அங்கே இந்த மகரந்தப் பொடிகள் அண்டங்களோடு கலந்து பிஞ்சுகளைப் பூரணப்படுத்தி முற்றச்செய்தபின்பு அந்தப் பொடி காய்க்கிறது. கடைசியில் அந்த அண்டாசயம் பழுத்துக் கீழே விழுந்து அதிலுள்ள வித்துகள் நாற்பக்கமும் சிதறுவதனுல் வேறே மரங்கள் உண்டாகின்றன.

6. பூவரசின் இலை பச்சைநிறமாயிருக்கும். முற்றும்போது மஞ்சள் நிறமாகி உதிர்ந்துபோகும். இலை தரையில் விழுந்தபிறகு காய்ந்து சருவாகிப் போகிறது. பூவரசின் பூ முதலில் மஞ்சள் நிறமாயும் முற்றியபின் இலேசான சிவப்பாயும் இருக்கும். காய் முற்றியபின் பூ உதிர்ந்து போகிறது. காய் ஒரு நெல்லிக்காய் அளவு பருமனுய் இருக்கும். காய் முதலில் பச்சை நிறமாயும், பிறகு மஞ்சள் நிறமாயும், முடிவில் இலேசான கறுப்பு நிறமாயும் இருக்கும். இலை வைகாசி ஆனி மாதங்களில் உதிர்ந்துபோகும். உதிர்ந்த சில நாளைக்குப் பிறகு தளிர்த்துவிடும்.

7. பூவரசின் கிளைகளை வருஷத்திற்கு ஒருமுறைதறித்து விடுகிருர்கள். சில இடங்களில் வருஷத்தில் இருமுறை தறிப்பதும் உண்டு. இருமுறைதறித்தால் மரம் கெட்டுப்போகும். ஒருக்காலும் கிளைதறிக்காத மரங்களும் உண்டு. அவை நெடுநீளமாய்

வளர்ந்து நாலாபக்கங்களிலும் கிளை ஓடி, அடர்த்தியாய் நிற்கும். ஒருநாளும் கிளைவெட்டாமலிருந்தாலும் பொதுவாய் இவை 40 அல்லது 45 அடிக்குமேல் வளருவதில்லை. மற்றவிருட்சங்களைப்போல் இது காட்டில் உண்டாகிறதில்லை. மனிதர் சஞ்சரிக்கும் இடங்களில்தான் இது உண்டாகிறது.

8. இந்த மரத்தை, பூவரசு என்றும் பூசரி என்றும் சிலாந்தி என்றும் அழைப்பார்கள். புஷ்பகோசமானது பூவுக்கு முன்னே வந்து புஷ்பத்தின் உட்பாகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அதை மூடிக்கொண்டிருக்கிறது. பூவின் உட்பாகம் சரியாய்ப் பூரணப்பட்டபிறகு புஷ்பகோசம் விரிந்து விடுகிறது. பூவானது முதன்முதல் மடல்திருகலாய் புஷ்பகோசத்திற்குள் அடங்கியிருக்கிறது.

9. பூவரசுக்கு ஆணிவேரும் அதிலிருந்து கிளைத்துப் போகும் சாதாரணவேரும் உண்டு. இந்த வேர்கள் பூமியில் இருந்து செடிக்கு வேண்டிய ஜலத்தையும் அதில் கலந்திருக்கிற மரஉணவையும் உறிஞ்சியெடுத்து மரத்தைப் போஷிக்கின்றன. வேரின் நுனியில் நுட்பமான விழுதுபோன்ற ஒரு மெல்லிய உறுப்பு இருக்கிறது. இதற்குத் தூய் என்றுபெயர். ஒருவேரில் அநேக தூய்கள் காணப்படும். இந்தத்தூய்களில் அனேக சிறு துவாரங்கள் உண்டு. மரத்திலும் வேரிலும் தூய்களிலுமுள்ள சிற்றறைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒன்றிலிருந்து ஒன்றுக்கு ஜலம் போகக்கூடியதான துவாரங்களும் உடையவைகளாயிருக்கின்றன. தூய்களினால் எடுக்கப்படுகிற தண்ணீர் துய்களின் வழியாய் வேருக்கும் மரத்துக்கும் செல்லுகிறது. மை ஒப்பும் காகிதத்தின் ஒருநுனியை, தண்ணீரில் முக்கும்போது தண்ணீர் காகிதத்தில் ஏறுகிறதுபோலவே தூய்களிலும் தண்ணீர் ஏறுகிறது. இந்தத்தூய்களின் எல்லாப்பக்கங்களைச் சுற்றியும் மண் அணுக்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். மழைபெய்யும்போது இந்த மண் அணுக்கள் ஈரத்தை ஏற்றுக்கொள்ளும். இந்த ஈரந்தான் மேற்சொல்லியபடி தூய்களின் மூலமாய் மரத்துக்குள் செல்லுகிறது. ஈரம் இல்லாதபோது தூய்கள் அழிந்துபோகும்.

பிரயோஜனம்:—1. பூவரசின் கிளையைத்தறித்து வயல் கிருஷிக்கு உரமாக உபயோகிக்கிறார்கள். இதுதான் இதன் முக்கிய பிரயோஜனம். இதற்காகத்தான் பூவரச மரங்கள் ஏதேஷ்டமாக வைத்து உண்டாக்கப்படுகின்றன.

2. இந்த மரத்தின் எல்லாப் பாகமும் அதாவது வேர், கம்பு, சருகு என்று சொல்லப்படும் காய்ந்த இலை, இலை முதலியவைகள் எரிக்க உபயோகப்படுகின்றன.

3. இந்த மரத்தின் பலகைகள் விசேஷித்த மரவேலைகளுக்கு உபயோகப்படுகின்றன. வைரம் முற்றிய பலகைகளால் நேர்த்தியான பெட்டி முதலியவைகள் செய்கிறார்கள். மற்றும் இந்தப் பலகைகளால் கதவுச்சட்டங்களும், ஜன்னல் சட்டங்களும், பெஞ்சு, நாற்காலி, மேஜை முதலியவைகளும், செய்யப்படுகின்றன. இதன் பலகைகளால் செய்யப்படும் சாமான்கள் அழுத்தமுடையனவாயும், பலம் பொருந்தியவைகளாயு மிருப்பதால் இது ஒரு விலையுயர்ந்த சரக்காயிருக்கிறது. ஆனால் இந்த மரத்தை புழுக்கள் அரித்துப் பேடாக்கி விடுவதனால் நல்ல பலகைகள் கிடைப்பதருமை.

4. இது நல்ல அடர்த்தியுள்ள மரமாகையால் நேர்த்தியான நிழலைக் கொடுக்கும். இதனால்தான் சில பெரிய மங்களாக்களில் இதை ஒரு போதும் அரக்காமல் பெரிய அடர்த்தியான மரமாய் வளர்க்கிறார்கள்.

5. இதன் இலைகளால் தொன்னை அல்லது கிண்ணங்கள் செய்யலாம்.

6. இதன் இலைகளைத் தைத்து சாப்பிடும் பாத்திரமாக உபயோகப்படுத்தலாம்.

7. மரப்பட்டையை மருந்துக்கு உபயோகப்படுத்தலாம்.

8. பட்டையைச் சுட்டு வர்ணத்துக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

9. பறவைகள் கூடுகட்டி இரவு இம்மரங்களில் தங்குகின்றன.

10. ஆடுமாடுகளுக்கு இதன் இலை உணவாகிறது.

11. இது கண்ணுக்குக் குளிர்ச்சியையும் வீட்டுக்கு அழகையும் கொடுக்கக்கூடிய ஒரு மரம்.

12. காற்று அதிகம் வீசி அடிக்கிற இடங்களிலே காற்றைத் தடுக்கிறதற்கு இந்த மரத்தை நட்டு வளர்க்கிறார்கள்.

திருவனந்தைப் பிராமண சிரேஷ்டர்களுக்கு

ஒரு விண்ணப்பம்.

கனவான்களே !

ஆணும் பெண்ணும் பிரபஞ்சத்தின் உடம்பும் உயிருமாம். ஸ்ரீபரமேசுவரர் ஸ்ரீபார்வதி தேவியைத் தன்பாகத்து வைத்ததாய்க் கூறுவதும் இக்கருத்துப்பற்றியே. "சத்தியாய்ச் சிவமாய்" "மாதா, பிதா, குரு, தெய்வம்" "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை." என்னும் ஆப்த வாக்கியங்களும் பெண்களையே சிறப்பித்துக் கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது நமது இல்வாழ்க்கையில் பெண்கள் பெற்றிருக்கும் உந்நத ஸ்தானத்தை நமது நித்திய அநுபவத்தினுலும் அறிந்துகொள்ளலாம். அன்றியும் உலகத்தில் நாகரீகமக்களாய் விளங்கும் எந்த ஜாதியாரையாவது எடுத்து அவர்களது சமுதாய நிலைமையை ஆராய்ந்து பார்க்கப்புகுந்தால் அந்த சமுதாயத்திலுள்ள மாதர்களின் நன்னிலைமையினுலே அந்த சமுதாயத்தார் அவ்வளவு உயர்ந்தஸ்திதியை அடைந்தார்களென்று அதிகப் பிரயாசையின்றியே கண்டுகொள்ளமுடியும். நமது ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த ஜப்பானியரும், சீனரும், தற்காலம் அடைந்திருக்கும் மேன்மைக்கும், புகழுக்கும், அந்நாட்டு மாதர்களின் நன்னிலையும் ஒரு முக்கிய காரணமென்று யாவரும் ஒத்துக்கொள்வார்கள். நமது தாய்நாடாகிய இந்துதேசம் புராதநச் சிறப்பும், புகழு மிழந்து, விவேகமும், வீரமும், மெய்ம்மையுமற்று, நமது முன்னோரது நற்காலத்தில் விலங்கினையராய் வாழ்ந்தவரும் இகழ்ந்து கூறுமாறு, நாளுக்குநாள் கீழ் நோக்கிச் செல்வதின் முக்கிய காரணம் நமது மாதர்களின் இழிவான நிலைமையே. என்னை? குந்தி, கோசலை, ஆதியான மாதரசிகளில்லாவிடத்து இராமனும், தருமனும், வீமனும், அருச்சுனனும், உதிப்பார்களா? உவர் நிலத்தில் பயிர் செழிக்குமா? வெறும் நீரில் வெண்ணெய் திரளுமா? ஒருக்காலும் இல்லை. நம் நாட்டுத் தாய்மார்கள் உத்தம குணசீலைகளாயும் விவேகவிதுஷிகளாயும் இருந்தாலன்றி நம் நாட்டில் அறிவும் ஆண்மையும் அழகும் வாய்ந்த புத்திரர்கள் உண்டாவதரிது. பொதுவாகப் பாரதநாட்டு மாதர்களெல்லாம் மிக இழிவான நிலைமையிலேயே இருக்கின்றார்க ளானுலும்

பிராமணோத்தமர்களே !

இந்நகரின்கண் உள்ள உங்கள் குலமாதர்களில் ஒருபாகத்தாரது தற்காலத் தன்மையை எண்ணுந்தோறும் உண்மையாகவே

என் மனம் திகிலடைகின்றது. உங்களால் அநுஷ்டிக்கப்பட்டுவரும் பால்ய விவாகமென்னும் அநியாய வழக்கத்தால் மற்ற சமுதாயங்களை விட உங்கள் சமுதாயத்தில் பால்ய விதவைகளின் தொகை மிகுதியாக விருக்கின்றது. இவர்களெல்லாம் செல்வச் செழிப்பும் சீரும் உடையவர்களாய் இருக்கின்றாருமில்லை. பொருளுடையார்க்கு வைதவ்யத்தால் விளையும் கொடுமைகள் ஒருக்கால் அவ்வளவு தோன்றாமல் முடியலாம்; ஏழை விதவைகள் பாடு ஐயய்யோ! இரங்கத்தக்கதாயிருக்கின்றது. அக்கிரசாலைச் சோற்றையும் பட்டத்தானங்களையும் நம்பி அகதிகளான விதவைகள் பலர் நானாதிக்குகளினு மிருந்து இங்கு வருகின்றனர். ஊணினா லுடம்புக்குண்டாகும் போஷணைகள் இல்லாத அக்கிரசாலைச் சோற்றை வறுமையின் கொடுமையினால் விழுங்கி வயிற்றை நிரப்பினாலும் உடுக்கத் துணிக்கும் தலைக்கெண்ணெய்க்கும் இருக்கயிடத்துக்கும் என்செய்வார்கள் இப்பாவங்களிலநேகருக்குக்குழந்தைகுட்டிகளுமிருக்கின்றன. இவர்களுடைய செலவுகளுக்கெல்லாம் பட்டத்தானப் பணம் போதாதாகவே இவ்வேழைகள் கூலிவேலை செய்யத் துணிவுகொள்ளுகிறார்கள். இவ்வாறாகத் துணிவுகொண்ட விதவைகள் பலர் இப்பட்டணத்தில் அநேக வீடுகளில் சமையற்காரிகளா யமர்ந்திருப்பதை யாவரும் பார்க்கலாம். இத்துடனும் இவர்கள் துன்பங்கள் நின்றுவிடுகின்றனவா? இல்லை! இல்லை!

வீட்டுடமஸ்தர்களால் இவர்களுக்குண்டாகும் துன்பங்கள் பல. அடங்காப் பிடாரிகளான மனைவிகள் கையில் சிக்கி விழிக்கும்கோழைக் கணவர்களுக்குண்டாகும் கோபத்துக் கிலக்காவதும் இவ்வேழைவிதவைகளே! செட்டுத்தனமும் சிறுதேட்டமுமுடைய சீமாட்டிமார் கையிற் சிக்கி சிற்றுண்டிக்கலந்தும் சுவையுணவுக்கேமாந்தும் துன்பப்படும் சீமான்கள் மனவெப்பத்துக் கிலக்காவதும் இவ்வகதிகளான விதவைகளே! சிறுதேட்டநாட்டமுடைய சிக்கனக்காரிகளான வீட்டு நாயகிமார் செய்யும் சிறுதிருட்டுகளுக்கெல்லாம் பேரேற்பதும் பேதைகளான இவ்விதவைகளே! குறும்பர்களான சிறுவர் சிறுமியர் செய்யும் சில்லறைகளுக்கு சிட்சை பெறுவதும் திக்கற்ற இவ்விதவைகளே! இவ்வாறாக இவர்கள் படும் கஷ்டங்களையும் அல்லும் பகலும் அநுபவிக்கும் துன்பங்களையும் அடுக்கிக் கூறத் தொடங்கினால் அதுவேஒரு பாரதமாகமுடியும்.

"வறியார்க் கழகு வறுவையிற் செம்மை"

என்னும் நீதியை அநுஷ்டிக்க மனவுறுதியுடைய புருஷர்களே அபூர்வமாயிருக்கும்பொழுது, பெண்கள் தம் நிலைகுன்றிப் போகுங்கா

லத்து அவர்களைக் குறைகூறத் தொடங்குவது அறியாமையேயன்றி மற்றியாதாகும்?

> "மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
> தானந் தவ முயர்ச்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்துபோம்"

என்று உண்மையான உலக அநுபவமுடைய ஒளவைப் பிராட்டியார் கூறியபடி வறுமையின் கொடுமையினால் இவர்களிற் பலர் நன்னெறி துறக்க நாடுகின்றனர். வெளிநாடுகளில் சமுதாயப் பரிஷ்காரப்பிரியர்கள் செய்விக்கமுயலும் விதவா விவாகங்களும் காந்தர்வ முறையில் ஆங்காங்கு நடைபெறவும் செய்கின்றனவேனும், அச்சடங்குகள் பொதுஜன திருஷ்டியில் பழிப்புடையனவாகவே தோன்றப்படுவதால் அவைகளாலுண்டாகும் நன்மைகளைத் தம்பதிகள் அநுபவிக்கும் பாக்கிய மில்லாதாகின்றனர். மாறாக இருபக்கத்தாருக்கும் பின்னும் துன்பங்களே விளைகின்றன.

பிராமணத் தலைவர்களே!

இவ்வேழைகளுக்குக் கைகொடுத்து உதவிசெய்ய வேண்டியது உங்கள் கடமையல்லவா? இத்தகைய ஏழைகள் எத்தனை பெயர் இவ்விடத்து உளர் என்றும் அவர்கள் படும் பாடு எத்தன்மைத்தென்றும் நீங்கள் யாராவது இதுகாறும் கவனித்ததுண்டா? மாலை 5 மணிக்கு அக்கிரசாலைக்குச் சென்றால் இவ்வேழைகளது தயநீயமான நிலைமையை உணர்ந்துகொள்ள முடியும். மெலிந்த உடலும், குழிந்த கண்களும், தள்ளாடும் நடையும், கந்தலான உடையும் உடைய இப்பாவங்களின் தோற்றத்தைக் கண்டால் இரங்காதாரும் உளரோ?

ஆதலின் கனவான்களே! இனியேனும் தாமதஞ் செய்யாமல் இவ்விடத்தில் ஒரு "விதவா ரக்ஷாசாலை" ஸ்தாபிப்பதற்காக முயற்சி செய்யுங்கள். அதற்குப் போதுமான பொருளுதவத்தக்க பிரபுக்கள் உங்கள் சமுதாயத்தில் அநேகர் இருக்கிறார்கள். புத்தன்சந்தை பிராமண சமாஜத்தார் இதனையுந் தங்கள் சங்கநோக்கங்களில் தலைமையானதாகக் கணித்து, இதற்காக மனப்பூர்வமாய உழைத்து இந்த ஸ்தாபனத்தை நிலைபெறச் செய்வார்களாயின், உங்கள் சமுதாயத்தவராகிய அநேக அநாதைகள் சுகஜீவிதஞ் செய்யவும், உங்கள் சமுதாயப் பெருமை குறையாதிருக்கவும், காரணமாகும்.

பத்திராதிபர்.

தற்கால இந்துக்கள்.

நம் பரதநாட்டைப் புண்ணியபூமியென்பர். உலக மலைகளி லெல்லாம் உயர்ந்த மலையும், எக்காலத்தும் நீர்ப்பெருக்கமறாச் சிவநதிகளும், சுவர்க்கபோகமும் பின்னெனத் தகும் முப்போகந் தரும் நிலவளமும், மேல் ஐரோப்பாக் கண்டத்தை ஒத்த நில விரிவும், அதனினுமிக்க ஜனத்தொகையுமுடைய நம் நாடு புண்ணியபூமி யெனப்படுவதும் வியப்பாமோ? தற்காலத்து, செல்வத்திலும் கல்வியிலும் நாகரீகத்திலும் ஏனைய சிறப்புக்களிலுட் முன்னவராய் விளங்கும் ஐரோப்பிய நாட்டார் "காய்கனி தின்றும் கானிலலைந்தும்" விலங்கனையராய் வாழ்ந்த அப்புராதன காலத்து அதாவது கி. மு. இருபதாம் நூற்றுண்டில் உயர்தர நிலைமை யடைந்திருந்த ஆரிய ரிஷிகளையும், சர்வ சமய சமரசமாயும் நித்தியமாயுமிருக்கிற நான்கு வேதங்களையும், பயந்த நம் தாய்நாட்டைப் புண்ய பூமியென்பதும் புதுமையாமோ? தற்காலத்திய ஐரோப்பிய சாஸ்திரிகளும் (European scientists) மதிப்புடன் ஒப்பத்தக்க அதிநுட்பமான ஆராய்ச்சிவன்மையும், எள்ளளவேனும் ஐயப்பாடின்றி உளகக் கூறின் பலபகுதிகளையும் விளக்கும் பெருந்திறமையும் உடைய சிறந்த தத்வசாஸ்திரத்தை கி. மு. 7 அல்லது 8–வது நூற்றுண்டில் வெளியிட்ட கபிலரைப் பயந்த நம் தாய்நாட்டைப் புண்ணிய பூமியெனப் புகழ்வதும் மிகையாமோ? சர்வ பிராணிகளும் சச்சிதாநந்த ஸ்வரூபியாகிய கடவுளின் படைப்பாகையால் உலக இன்பங்களில் பங்குபெற சமஉரிமை யுடையனவென்றும், வாயில்லாப் பிராணிகளை வதைசெய்வது பெரும்பாதகமென்றும், மனிதருக்குள்ளேயே நான் பெரியன் நீ சிறியன் என்னும் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துவது தேவகட்டளைக்கு முற்றிலும் விரோதமானதென்றும், முதன்முதல் உலகறிய விரித்துரைத்து உலகத்தவரில் பாதி வகுப்பார் தன் திவ்வியக் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கும்படி செய்த புண்ணியாத்மாவாகிய ஸ்ரீகௌதம புத்தரை கி. மு. 6–வது நூற்றுண்டிற்றுனே உதவிய இந்துதேசத்தைப் புண்ணிய பூமியென்று புனைந்தரைப்பதும் விந்தையாமோ? இம்மட்டோ? வானசாஸ்திரத்தின் முதற்படியான ஜோதிஷ சாஸ்திரமும்

சாஸ்திரீகமுறையான க்ஷேத்திரகணிதமும் (Geometry) பின்ன சங்கியை முறையும் (Decimal) இரசாயன சாஸ்திரமும் (Chemistry) உற்பத்தியான இடமும் நமது இந்து தேசமே. இன்னும் இந்நாட்டின் பெருமையை விரித்துக் கூறப்புகுவனேல் இவ்வொரு பத்திரிகைமுழுதும் எழுதினாலும் அடங்காதாகவே முடியும். இவ்வாறாக எவ்வழியிலும் முதன்மைஸ்தானம் பெற்றிருந்த நம் தாய்நாடு தற்காலத்திய அதிபயங்கரமான நிலைமையை அடையக்காரணம் என்ன? கி. மு. 12-வது நூற்றாண்டில் பாரதப் போரில் வெற்றியடைந்து, 4-வது நூற்றாண்டில் அலக்ஸாண்டர் பெருமானையும் எதிர்த்து நின்ற நமது பூர்வீகர், குடியிருக்க வீடோ, அரசாள நாடோ, இல்லாத வெறும் வழிப்பறிக் காரனையொத்த மகம்மது கோரியின் புல்லிய படைமுன் நிற்க ஆற்றாது மாண்டொழிந்த காரணம் என்ன?

சகோதரர்காள்! நாம் உண்மையான இந்துக்களானால், ஆத்மாபிமானமும் தேசபக்தியுமுடைய மனிதர்களானால் இதன் முக்கிய காரணங்களை ஆராய்ந்தறிய வேண்டாமா? நமது தற்காலத்திய இழிவான நிலைமையைப்போக்க வழிதேடாது பண்டுள்ளோர் நிலைமையை மட்டும் பத்துநூறாகப் பெருக்கிக் கூறுவதில் பயனேது? நமது முன்னோர் பெருமைகளெல்லாம் அவரோடு போயின. நாமோ பலவழியானும் தாழ்ந்த ஸ்திதியிலேயே இருக்கின்றோம். "எனக்கு A, B, C, கூடத்தெரியாது; எங்கள்முப்பாட்டா எம், ஏ. பாஸ்பண்ணியிருந்தார்" என்று கூறும் வாலிபனுக்கு எவராவது ஒரு உத்தியோகம் கொடுக்க முன்வருவார்களானால் நாமும் பழங்கதைபேசிப் பயனடையலாம். அப்படிச் செய்வார்யாரேனும் உளரோ. இதுவோ பாடுபட்டவனுக்கு மட்டும் கூலி கொடுக்கும் காலம். ஆகவே பூர்வப்பிரதாபங்களைக் கூறுவதை விட்டுவிட்டு நமது பாட்டை மட்டும் பற்றிக் கவனிக்கத் தொடங்குவோம்.

புராதந கிரேக்கர் ஒற்றுமைக் கேட்டினாலும், உரோமர் செல்வப் பெருக்கின் பயனாகிய சீர்கேட்டினாலும், கெட்டொழிந்தனரென்றால் இந்துக்களாகிய நாம் நல்லொழுக்க மின்மையால் நாசத்தையடைந்தோம். இத்துணிகரமான அபிப்பிராயம் முழுதும் தப்பானதென்றோ மடமையானதென்றோ பலர் எண்ணக்கூடும். ஆனால் பாரபட்சமின்றி நமது நிலைமையை ஆதியோடந்தமாக ஆராயத்துணிவோர்க்கு என் அபிப்பிராயத்தின் உண்மைநிலை தோன்றத்தவறாது இணையற்றபண்டிதரும் ஒப்புயர்வற்ற நாவலரும், மிகப்பெருமை வாய்ந்த இராஜ்யதந்திரியும்

இந்தியர்களிடத்து உண்மையான அநுதாபமுடையவருமாயிருந்த இராஜப்பிரதிநிதிமாட்சிமைதங்கிய கர்சன் பெருமான்,(Lord Curzon) கல்க்கத்தா சர்வகலாசாலையில் கலாசாலைப்பட்டம் பெற்றவருக்கு ஒருக்கால் விருதளித்தகாலத்தில், இந்தியர்களெல்லாம் பெரும் பொய்யர்களென்றும், உண்மையைப்பற்றி அவர்களுக்கு மதிப்போ பக்தியோ ஒருசிறிதும் இல்லையென்றும் விண்மாரியொப்ப வாய்மாரி பொழிந்தார். அக்கடுமொழிகளைக் கேட்ட இந்திய உலகம் அன்று தலைகீழாய் மறிந்தது. இந்தியாவிலுள்ள முக்கிய பட்டினங்களிலெல்லாம் அவர் மொழியை மறுக்கப் பல கூட்டங்கள் கூடின. கர்சன் பெருமானைத் திட்டாத வர்த்தமானப்பத்திரிகைகளும் அக்காலத்தில்லாதிருந்தன. முன்னூட்டைப் பின்தொடரும் செம்மறியாட்டுமந்தை போல், வம்புத்தனம் பேசும் பத்திரிகைகளுடையவும் துரபிமானிகளான தேசபக்தர்களுடையவும் அபிப்பிராயங்களைப் பின்பற்றி இந்தியர்களெல்லாம் கூத்தாடினர். உண்மையாகவே, அக்காலத்தில் பள்ளிப்பையனாகவிருந்த எனக்கும் அம்மேதாவியின் வாய்மொழி நச்சுமொழியாகவே தோன்றிற்று. ஆனால் அக்கால முதல் இக்ஷிமிஷம் வரையிலுமுள்ள எனது அநுபவத்தால் அவர் கூறிய மொழி முற்றிலும் மெய்யானதென்றே நான் இப்பொழுது உணருகின்றேன். இதற்கு அத்தாட்சியாக கல்க்கத்தா "Indian World" என்ற பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீமத் பிருத்விசந்திரரே என்பார் தன் பத்திரிகையில் சில மாதங்களுக்கு முன் எழுதிய ஒரு நிருபத்தின் சில பாகங்களைக் கீழே வரைகின்றேன்.

"There is more private & public dishonesty in India than in in any other country in the world and for lack of mutual trust or confidence no other people could take the shine out of us. At the bottom of this may be traced an intense and mean selfishness with our nature since a long time past."

கர்ஸன்பிரபு ஆங்கிலேயரானதினால் அவர்மொழி அநேகருக்கு அருவருப்பாக இருக்கலாம். ஸ்ரீயுத பிரித்விசந்திரரே என்பவரோ இந்தியாவிலேயே பிறந்து, இந்தியாவிலேயே வளர்ந்து, இந்தியர்களுடைய நன்மைக்காகவே தனது ஜீவிதமுழுதையும் அர்ப்பணஞ்செய்து ஆத்மபரித்தியாகத்தோடு பாடுபடுவர். அன்றியும் பாம்பறியும் பாம்பின்கால் என்றபடி அவரும் நம்மவரில் ஒருவராகையால் நமது குணாகுணங்களை அறிவதிற்கு கர்ஸன் பிரபுவைவிட அதிக வசதியுடையவர். ஆகவே அவருடைய அபிப்பிராயத்தைப் பலவழியா

னும் அங்கீகரிக்கவே நமக்கு அதிக நியாயமுண்டு. எனினும் அவருடைய சொல்லை வேதவாக்காக ஒப்புக்கொள்ளத்துணியுமுன் நம்முடைய தற்காலநிலைமையையும் சற்று ஆராயத் துணிவோம்.

இடைக்காலத்தில் ஒரு சுதேசியக்கிளர்ச்சி உண்டானதும் அஃது இன்றும் அங்கங்கே நிலைபெற்றிருப்பதாய்த்தோன்றுவதும் அநேகர் அறிந்திருக்கலாம். அது முதல் நமது நாட்டில் தோன்றிய கைத்தொழில் வியாபாரக்கம்பனிகளுக்குக் கணக்கு சங்கை இல்லை. பட்டணங்களிலும் பட்டிதொட்டிகளிலும் கம்பனிக்காரர் நிறைந்தனர். கம்பனிகளுக்குப்பங்கு சேர்ப்பதற்காக ஏஜன்டுகளும் தெருத்தெருவாய் அலைந்தனர். ஆனால் அவைகளில் எத்தனை இப்பொழுது உயிர்வாழ்கின்றனவென்று கணக்கெடுக்கப் புகுவோமானால் ஒப்பாரியும் மனப்பாடம் பண்ணிக்கொண்டுதான் போகவேண்டும். சிலவாரங்களுக்குமுன் "பிப்பில்ஸ்பாங்கு" உடைபட்டதும் அதனால் அநேகர் வறியரானதும் பத்திரிகை வாசிப்போர் ஞாபகத்திலிருக்கலாம். கழிந்த இந்திய சமுதாயாபிவிர்த்தி சங்கத்தின் வருஷாந்தக் கூட்டத்தில் இவ்விஷயத்தைப்பற்றி சர். நாராயணசந்திரவர்க்கர் பேசிய பொழுது இந்தப் பாங்கு உடைபட்டது இந்தியர்களின் நல்லொழுககமின்மைக்கு ஒரு அறிகுறியாமென்றனர். அஃது முழுதுய் மெய்யே. கூட்டுவியாபாரத்துக்கு நம்மவர் லாயக்குடையவராக வேண்டுமானால் இன்னும் எத்தனையோ ஆண்டுகள் செல்லவேண்டும். சென்ற மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் நாம் மேற்றிசையாரோடு ஊடாடிப் பழகியும் வர்த்தகவெற்றிக்கு அவர்களிடமுள்ள உத்தமக் குணங்களைக் கற்றுக்கொள்ளாதொழிந்தது எவ்வளவு கேவலம்! எவ்வளவு பரிதாபம்! நம்மவர்க்குள் பத்துப்பேர் ஒரு வியாபாரத்திலாவது அல்லது வேறெத்தொழிலிலாவது பங்காளிகளாகச் சேர்ந்தால் வாயடியும் கைவீச்சுமுடையவர் இலாபமடைவதும் இவ்விரண்டுமில்லாதவர் முதலையிழப்பதுமன்றி இலாபமடைந்த சமர்த்தர்களால் மூடரென்றும் மூளையற்றவரென்றும் பழிக்கப்படுவதும் சர்வசாதாரணமாய் விட்டதே. செல்வன்மையும் தோற்றப்பொலிவுமுடைய பலர் வாயும் கையுமில்லாத பாலர்களிடத்தில், அப்புவியுந்தருவேன், அமரருலகுய்ப்பேன் என்று ஆசைவாக்குரைத்து அவ்வேழைகளது கைம்முதலைப்பிடுங்கி "விவேகமில்லாதவன் முதல் வெட்கமில்லாதவனுக்கு" என்றபடி பூஜை போடுகிறார்களே! ஐயோ! நம்மவர்களது இந்நிலைமை எவ்வளவு இழிவானது? இத்தகைய துர்க்குணம் நம்மவரிடத்துக் குடிகொண்டிருக்கும்வரை நமது இந்துதேசம் தலையெடுக்குமா?

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்னும் திருமொழிதோன்றிய இப்பாரதநாட்டிலோ இப்பாதகங்கள் நடைபெறவேண்டும்.
பதியும் நிதியும் பாலனும் மனைவியும் இழந்தும் சொன்னசொல் தவறாத தூயரான அரிச்சந்திரனை அளித்த நமது தாய்நாட்டிலோ இவ்வநியாயம் நிகழவேண்டும்? அந்தோ அவலம்! அவலம்!! உளத்தூய்மையும், செயல் நேர்மையுமில்லார் உலகத்தில் சிறப்படையார். சிறப்புடையவர்போல் சிலகாலம் வாழ்ந்தாலும் முடிவில் சிறுமையே அடைவர்.

(தொடரும்)

பத்திராதிபர்.

புத்தக வரவு.

விக்கிரகாராதனம்.— இந்நூல் திருநெல்வேலிப் பேட்டை ஸ்ரீமாந் த. ஆறுகநயினார் பிள்ளையவர்களால் எழுதப்பட்டு திருநெல்வேலி வி. எம். பேங்கர் ஸ்ரீமாந் வெ. மு. அம்மையப்பபிள்ளையவர்கள் பொருளுதவியால் அச்சியற்றப்பெற்றது. நம்மவருக்குள் சமயாபிமானம் குன்றிவரும் இக்காலத்தில் இத்தகைய நூல்களின் தோற்றம் இன்றியமையாததே யாகும். மதுரைத் திருஞானசம்மந்த சுவாமிகள் ஆதின மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மகா சன்னிதானம் இக்கிரந்தத்தைப் பற்றித் திருவாய்மலர்ந்தருளிய அபிப்பிராயத்தை நாமும் ஐயப்பாடின்றி ஒப்புக்கொள்கிறபடியால் அதனைக் கீழே பகர்த்துகின்றோம். "ஆலயவழிபாட்டின் அருமைதெரியாது புறச் சமயிகள் போதனைக்குட்படும், நவீனநாகரீகிகள் உண்மை தெரிந்துகோடற்கு மிக உபகாரமாயுளளது. புறச் சமயத்தாரால் நிகழும் ஆக்ஷேபங்களை ஆறுதலோடு எடுத்துக்காட்டி தக்க சமாதானம் கூறியிருப்பதும் நமக்கு மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. இப்படியே சைவசமயிகள் சமயஆராய்ச்சி விஷயத்திலும், சைவசமயப் பிரசங்க விஷயத்திலும் ஊக்கமுடையவர்களாயிருப்பின, உலகத்துக்குமிகவும் உபகாரமாயிருக்கும்." இதன் விலை அணா 8.

வேண்டுவோர் ஸ்ரீமாந் த. ஆறுமுகநயினார்பிள்ளையவர்கள் திரிபுரசுந்தரியம்மன் மேலத்தெரு திருநெல்வேலிப் பேட்டை. என்று எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்

தாயம்மையார்சரித்திரம்—இது ஸ்ரீவில்லிபுத்தூர் C. M. S. ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமாந் மு. பொ. ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள் எழுதியது. இவ்வம்மையார் பேட்டை ஸ்ரீமாந் கைலாசம் பிள்ளையவர்கள் மனைவி. இல்லறதருமங்களை நன்குணர்ந்து தன் நாயகருக்கு உற்ற துணைவியாயிருந்தவர். இத்தகைய ஜீவிதசரித்திரங்கள் நம்மவருக்குள் அபூர்வமாதலின் நமது பெண்கள் ஓய்வுநேரங்களில் பயனற்ற நூல்களை வாசித்தும், ஊர்வம்புகள் பேசியும் காலத்தைவீண் போக்குகின்றனர். இல்லக்கிழத்திகளுக்கு நமது அம்மையார் சரித்திரம் மிக உபயோகமாமென்பதற்கு சந்தேகமில்லை.

நீதிநெறித்தாலாட்டு— இதும் ஷை பிள்ளையவர்கள் எழுதியதே. திருக்குறள் 133 அதிகாரங்களுக்கும் ஒவ்வொரு அதிகாரத்துக்கு ஒவ்வொரு கண்ணியாக 133 கண்ணிகளால் அமையப்பெற்றிருக்கிறது. இந்நூலுக்கு முன்னுரையெழுதிய ஸ்ரீமாந். C. P. சுப்பய்யாபிள்ளையவர்கள் B. A. இதைப்பற்றிப்பின் வருமாறு கூறியிருப்பது மிகப்பொருத்தமானதே‘ இத்தாலாட்டைப்பாடுவோரும், பாடுவிப்போரும், கேட்போருமாகிய ஒரு குடும்பத்திலுள்ள பல பருவத்து மக்களின்கருத்தும் இதிற் செல்லும்படி நேரிடுமாதலின் இந்நூல் யாவருக்கும் பயன்படுவதாகவே இருக்கின்றது. மேலும் முதநூலாகிய திருக்குறளைப்பற்றிய எண்ணமும் அதனைக்கற்கும் விருப்பமும் பற்பலரிடத்தும் உண்டாவதற்கு இந்நூல் சிறந்த கருவியாகின்றது. குழவிப்பருவத்தில் ஊட்டுமறிவே பின் வளர்வது இயற்கையாதலின் இவ்வுண்மையை உணர்ந்த இந்நூலாசிரியர் இம்மை மறுமை வீட்டிற்கு உறுதி பயப்பதோர் நீதி நெறியை விளக்குவதாகிய இவ்வின்னமுதை அப்பருவத்திலேயே ஊட்டவேண்டுமென்னும் கருத்துடையவர்களாய் இந்நூல் எழுத முன்வந்தார்கள். தமிழ் உலகம் இவர்கட்கு என்றும் கடப்பாடுடையதாயிருக்கின்றது.” இதன் விலை அணா $1\frac{1}{2}$, வேண்டுவோர் நூலாசிரியருக்கு எழுதி வி, பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திரிகைவரவு.

சுகாபிவிருத்தினி:—இது புதுச்சேரியிலிருந்து தசமிதோறும் வெளிவரும் ஒரு பிரதிபட்சப்பத்திரிகை. உபயோகமான விஷயங்கள் பல தெள்ளிய தமிழ் நடையில் எழுதப்பெற்று இதில் அடங்கியுள்ளன. பருஷசந்தா வெளியூருக்கு ரூ 2—0—0.

லோகோபகாரி: இது சோமவாரந்தோறும் சென்னையிலிருந்து வெளிபாகும் ஒரு உயர்தர வாரப்பத்திரிகை. இதில் தமிழ்மக்களுக்கு நன்மையும் இன்பமும் விளைக்கத்தக்க அரிய பெரிய விஷயங்கள் எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. வருஷசந்தா ரூ 3—8—0. வேண்டுவோர் சென்னை கோபளீசுரன் பேட்டை "லோகோபகாரி" மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியன் அட்டவர்டைசர் – இது புதுச்சேரியிலிருந்து வெளிவரும் ஒரு மாதாந்தப்பத்திரிகை. வருஷசந்தா ரூ 1—0—0. வாசிக்கத்தக்க பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்பத்திரிகைகளை நமக்கு அநுப்பித்தந்த பத்திராதிபர்களுக்கெல்லாம் மிகநன்றிபாராட்டுகின்றோம்.

கியாலண்டர்வரவு: திருச்சி, இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ்கியாலண்டரும் சென்னை திருவல்லிக்கேணி மேசேர்ஸ் S. G. அய்யர் அண்டுகம்பெனியார் கியாலண்டரும் வந்தனத்துடன் வரப்பெற்றோம். அவ்விரண்டும் மிக அழகாக அச்சியற்றப்பட்டுள்ளன.

போஷகர் வரவு

ஸ்ரீமாந்.	S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள்	ரூ	60
,,	A. அருணசலம்பிள்ளையவர்கள்	,,	4
,,	N. சுந்தரமய்யரவர்கள்	,,	4
,,	E. அய்யாவுபிள்ளையவர்கள்	,,	4

சந்தாதாரர் வரவு.

,,	M. நாகலிங்கம் அவர்கள்	,,	1
,,	A. ஆறுமுகம்பிள்ளையவர்கள்	,,	2

மாணவர்களுக்குப்

போட்டி உபந்யாசங்கள்.

1.	அச்சுயந்திரத்தின் உற்பத்தியும் அதன் வளர்ச்சியும்.	மாசி
2.	இப்பொழுது ஜீவித்திருக்கும் ஏதேனுமொரு தென்னிந்திய சிரேஷ்டரின் ஜீவித சரித்திரச்சுருக்கம்	பங்குனி.
3.	தென்னிந்தியாவிலுள்ள ஏதேனுமொரு பட்டணத்தின் சரித்திரம்	சித்திரை

(a) இவ்வியாசங்கள் அந்தந்த மாதம் 30-உ க்குள் நமக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

(b) காகிதத்தின் ஒரு பக்கம் தெளிவாயெழுதப்பட்டிருக்க வேண்டும். புல்ஸ்கேப் 12 பக்கங்களுக்கு மேற்படக் கூடாது.

(c) ஒவ்வொரு உபந்யாசத்தோடும் 4 அணா தபால் ஸ்டாம்பும் அந்தந்த ஸ்கூள் தமிழ்ப் பண்டிதரிடமிருந்து ஒரு நற்சாட்சிப் பத்திரிகையும் அனுப்பவேண்டும்.

(d) பரிசுபெறும் வியாசத்தைப் பற்றிய சகல உரிமைகளும் நமக்கேயாகும்.

(e) ஜெயம்பெறும் மாணவருக்கு 1 ரூபாய் முதல் 2 ரூபாய் வரை விலையுள்ள தமிழ்ப்புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.

S. முத்துசுவாமிப்பிள்ளை,

"தமிழன்" பத்திராதிபர்,

திருவனந்தபுரம்

அறிவிப்பு.

அச்சுக்கூடம் மாறும்போதெல்லாம் "Press Declaration" எழுதிவைக்கவேண்டுமென்ற கவர்ன்மென்டு நிபந்தனைப்படி, அது எழுதி வைப்பதற்கு சிறிது தாமதம் நேரிட்டபடியால் இப்பத்திரிகையும் சிறிது தாமதமாக நேர்ந்தது. தைமாதப்பத்திரிகை முதல் எல்லாப்பத்திரிகைகளும் அந்தந்த மாதமுடிவிலேயே திட்டமாய் வெளிவரும். இதுவரையிலுமுள்ள தாமதம் எனது உபேட்சையால் வந்ததல்லவாதலால் நமது சந்தாதார்கள் அதனைப்பெரிதாக மதியார்கள் என்று நம்புகிறேன்.

பத்திராதிபர்.

தமிழர் தொன்மை.

அகவற்பா.

ஒண்மை யறிவு மோர்வுமிக் கோரே
உண்மை கேண்மின் உண்மை கேண்மின்?
மீன்கொடி படைத்த மேன்மை மனுக்கள்
ஆன்ற பாண்டிய ரனைவருந் தமிழர்.
தெற்கட் பஃறுளி யாறு சீர்சால்
நற்புகழ் வடக்கண் நளிரிமை யார்மலை
வரைதமிழ் நாடா வயங்கிய முற்கால்
திருவிட மெனும்பே ரதற்குச் சிறந்தது.
பின்னு ரியர்கள் பிறங்கின் னாட்டில்
உன்னிவந் துகுடி யுறுமுன மிகுத்
தமிழ்மொழி வழக்குந் தகையொண் ணூலும்
இமிழிசை யைந்திணை இனமுந் தேவும்
போற்றவர் யார்க்கும் பொதுச்சிவக் கோளும்.
ஆற்றருந் தளியு மகத்தெண் ணெழுத்தும்
நயமிகு மொழுக்கமும் நனிச்சீர்த் தேற்றமும்
உயிர்த்திருந் தனவற முனுற்ற ரிருந்தது.
மற்றிவை யாவும் வான்றமிழ்ப் புலவர்
சொற்றமொழிகள் தொகைப்படு வேதம்
ஆகமம் புராண மவிரிதி காசம்
வாகய லார்சொல் மருளி லாங்கிலங்
கற்றவர் கற்பொறி கவின்பந் தர்க்கார்
தத்தர் முன்னையர் தம்முறை வழியால்
துணியப் பட்டன. தொன்றீ ரினத்தில்
இணங்கா நாற்குல மியற்றினர் பினனோர்.
என்னனு மொருதலை யிவையுண்
மன்னி யுணர்ந்து மயக்கொழி வீரே.

சுவாமி, விருதை. சிவஞானயோகிகள்.

சுதேசவர்த்தமானம்.

தென்னுப்பிரிக்காவும் அங்குள்ள இந்தியர்களும்

இப்பொழுது தென்னுப்பிரிக்காவில் வஸிக்கும் நம் தேசத்தார் சுமார் ஒன்றரை லட்சம் ஜனங்கள் என்று மதிக்கப்படுகிறது. அவர்களில் கேப்காலனியில் சுமார் 15,000 பேர்களும், டிரான்ஸ்வாலில் 10,000 பேர்களும், ஆரஞ்சியாவில் 100 பேர்களும், பெரும்பாலும் அதாவது சுமார் 1,18000 பேர்கள் நேட்டாலிலும் இருக்கிறார்கள். நேட்டாலிலிருப்பவர்களை மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம்.

1. ஒப்பந்தக்கூலிகள், அதாவது ஒப்பந்தத்தின் பேரில் கூலி வேலைசெய்து வருபவர்கள் 32,000 ஜனம்.

2. ஒப்பந்தம்முடிந்தவர்களும் அவர்கள் சந்ததியாரும் 71,000 ஜனங்கள்.

மற்ற இந்தியர்கள் 15,000 ஜனங்கள். இவர்கள் கங்காணிகள் வலைக்குள்படாது தாங்களே கைம்முதல் முதலான சௌகரியங்களுடன் அந்நாட்டிற்கு வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலானவைசெய்யும் நிமித்தம் சென்றவர்கள்.

தென்னுப்பிரிக்கா வெள்ளையர்கள்.

தென் னூப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் அத்தேசத்து பூர்வகுடிகளல்லர். நம் தேசத்தவர்களைப்போலவே அவர்களும் அங்கே பஞ்சம் பிழைக்கவந்தவர்களும் அவர்களின் சந்ததியாருமே. அவர்களைக் காலனியாரென்று பிரஸ்தாபித்திருக்கிறது. காலதேசவர்த்தமானங்களாலும், தாய் ராஜாங்கத்தாரின் பேருதவியாலும் அவர்கள் பலவான்களாயினர். நம் தேசத்தவர்களோ வாயில்லாப் பூச்சிகள்போலவும், தாயில்லாக் குழந்தைகள் போலவும் அக்காலனியார் கொடுமைக்கு உட்பட்டு வருந்துகின்றனர். 'பலமே தர்மம் பலமே நியாயம்' என்றபடி இக்காலத்தில் "வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெருவழக்குக்கு இழுக்குமுண்டோ? வலுத்தவன்கைப் பணியாரம்" என்றவாறு, வலியார் மெலியோரை என்னசெய்த போதிலும் கேள்வியில்லாமலிருக்கிறதல்லவா? தர்மமும் நியாயமும் தலைகாக்கு மென்பது காந்தி என்னும் புருஷனது கொள்கையாக இருக்கிறது. ஆனல் தென்னுப்பிரிக்கா காலனியார் செய்யும் கொடுமைகள் ஷ நியாயத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் மனதையும் கலங்கச்செய்கிறது.

THE COMPLETE LETTER WRITER

4th Edition Revised and Enlarged by

HARI CHARAN DAS

Price Re. 1. (*full cloth gilt 320 pages.*)

An universal Guide to the Art of letter writing for all positions of life, It contains 24 Chapters Private Correspondence, News Papers. Doctors. School Correspondence, Government and Commercial, Collectors Office. Attorneys Vakils and Muktears. Steamers, Police. Municil pality, Incometax, Railways, Tramways, Medical Department, Posta, Department, Telegraph Department, precis Writing, Drafting Docketing Book keeping, Miscellaneous forms Miscellancous Application forms, Forms of Address paper Current. Abberviations and Daily wages.

MARTICULATION ESSAY by Hari Charan Das. Very useful book School Boys. Price As. 8.

ENGLISH ETIQUTT & ENGLISH PROVERBS.

A very useful book for those who come in contact with Englishmen Price As. 5. only.

CHILD'S EASY CONVERSATION, 2nd Ed.

If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two or three months. Price As. 10 only

M. L. Das & Co, BOOK-SELLERS & PUBLISHERS.

122, Baitakhana Road Calcutta,

The Northern Sircars Life Assurance Co, Ltd,

27, Dharamtala Street.

CALCUTTA.

ESTABLISHED 1903.

Possesses Govt. Security.

Affords Life & Marriage assurance facilities to its sub cribers,

MONTHLY PREMIUMS

Life Branch	**First Class**	**Rs 2**
	Second Class	**Re 1**
Marriage		**Re 1**

For pospectus, application forms etc, apply to

THE MANAGER

The "Tamilian"

Trivandrum.

ரசாயன அரண்மனையில் செய்த.

கைகண்ட அபூர்வ மருந்துகள்.

ஹரிதாசர் வெள்ளி யெண்ணெய் (கைகண்டது)

சகல விதமான கரே மேகம் சபந்தமான வியாதி, கண்டமாலை, ஆருதரணங்கள், அசுத்த ரத்தம், மேகநீர், படை, கட்டி பிளவை, நீரிழிவு, நாள்பட்ட சொறி முதலியவைகள் அடியோடே நீங்கும். அசல் வெள்ளியிலும் மூலிகைகளிலுமே ஹரிதாசருடைய முறையின்படி செய்யப்பட்டது; மிகவும் கைகண்டது:—விலை ரூ 2–8.

ஹரிதாசர் காலரா துளி (கைகண்டது)

வாந்திபேதிக்கும், சகல பேதி, வயிற்றுவலி அஜீரண சம்பந்தமான வியாதிகளுக்கும கைகண்ட உப்புத்துளி மருந்து. இம்மருந்தை யுபயோகித்ததில் ஒரு காலரா கேஸாவது மரணமாக முடியவில்லை. புட்டி விலை 1–க்கு ரூ 1-4-0

ஹரிதாசர் ஹெர்பல் பெயின் பாம் (கைகண்டது.)

இதைவிட கைகண்ட மேல் பூச்சு மருந்து எங்கும் கிடையா தென்று, வாங்கி உபயோகித்தவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். தலைவலி, கால் கை வலி, முழங்கால் வலி, மார்புவலி, பாரிசவாய்வு முதலிய எவ்விதமான உடம்புவலியும் சீக்கிரத்தில் நீங்கும். ஒவ்வோரு வீட்டிலும், எப்பொழுதும இம்மருந்து ஒன்று இருக்கவேண்டியது. விலை அணு 10.

ஹரிதாசர் என்னுத்தைலம் (ஸ்நானதைலம்)

மேகச்சூடு தணியும், மேகவியாதி குறையும்; ஞாபகசக்தியுண்டாகும். சகல விதமான கண் வியாதிகள் நீங்கும், குளிர்ச்சியையும், சுத்தத்தையும் தரும் முடியையும் வளர்க்கும், யாவரும், எப்பொழுதும் உபயோகிக்கலாம். ஐயா, தேவதாஸ்பிள்ளை பி. ஏ. அவர்களுக்கு எழுதுவது:—உங்களுடைய என்னுத் தைலம் மூன்று ஸ்நானம் செய்ததில், மங்கலாயிருந்த என் இடது கண், வலது கண்ணைப்போல் தெளிவாகி விட்டது. இதை சந்தோஷத்துடன் அறிக்கையிடுகிறேன்.—இப்படிக்கு தங்கசாமிபிள்ளை, ஹெட்மாஸ்டர் கவர்ன் மெண்ட் டிரெயினிங்ஸ்கூல், பெங்களூர்.

அறிக்கை:—இன்னும் பல விதமான ஸ்நான தைலங்கள் உண்டு. தைலம் வேண்டுவோர் வியாதியின் குறிப்பைத் தெளிவாக எழுதினால் தகுந்ததைலம் அனுப்பப்படும், ஸ்நான தைலங்கள் எல்லாம் (4 அவுன்ஸ்) புட்டி 1-க்கு ரூபா 1.

ஹரிதாசர் அமிர்தபில்லை (கர்ப்பஸ்திரிகளுக்கு)

இது 5 வீதம். கெர்ப்பிணிகளுக்குண்டாகும் சகல விதமானதுன்பத்தையும் வியாதியையும் நீக்கும். பிரசவகாலத்தில் சுலபமானபிரசவமாகும், விபரம் தெளிவாய் எழுதி தகுந்தநம்பர் பில்லைகள் பெற்றுக்கொள்ளவும். 30 பில்லை ரூபா 1.

வியாதியைப் பற்றித் தெளிவாய் எழுதினால் தகுந்த மருந்தும் விலையும தெரிவிக்கப்படும். பதில் கடிதத்துக்கு ஸ்டாம்பும், மேல் விலாசம தெளிவாய் எழுதியும் அனுப்பவேண்டியது. இங்கிலீஷில் எழுதினால் நல்லது.

H. தேவதாஸ் பிள்ளை, பி. ஏ.
மானேஜர், ராசாயன அரண்மனை,
2/93 பிராட்வே, மதராஸ்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி இல்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பர கியாட்லாக்கு இனாமாக அனுப்பப் படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ளமாலை 1க்கு 6 அணா முதல் ரூ 12 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் சிறிதாகவிருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ள கண்டி 1-க்கு ரூ 1 முதல் 10 வரை. [illegible] முகக்கண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு அ 10 முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!

பனிக்கு அடக்கமான சுத்தமான சம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைசும், நேர்த்தியுமான கம்பளி போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழம் அகலம், சிகப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராகவிருக்கின்றன, உருப்படி 1-க்கு ரூபா 5 8 0, ஷை சிறியது 1-க்கு 4 8 0 மேகவர்ண போர்வை 1-க்கு 6 8 0 தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வைரவர் [illegible]

க-வது நெம்பர்	ஈ-க்கு		3 0 0
உ-வது	,,	,,	2 8 0
௩-வது	,,	,,	2 0 0
ச-வது	,,	,,	0 6 0

வெண்பட்டுவேஷ்டிகள்

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் வேஷ்டிகள்மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி, ஜரிகைக் கம்பிபோட்டவை.

முழம்	அகல	ரூ	முதல்	வரை
4	2	4½	,,	7
6	2½	7	,,	9
6	3	10	,,	12
7	2½	8	,,	12
7	3	10	,,	14
8	3	12	,,	15
9	3	14	,,	20
10	3	15	,,	22

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளைவெண்கலத்தாற் செய்தசெம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்களடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு ரூபா 2

பெரியசெட்டு1க்கு ரூபா 4

நல்ல பெருங்காயம் தோலா 10க்கு ரூ 1 0 0 உடனே எழுதுங்கள்.

விலாசம் — மானேஜர்

பட்டுபீதாம்பர கம்பெனி,

தாராநகர் தெரு, காசி.

Silk Pitaber Co., Benares City.